Registered No. M. 2330

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

749

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 26 | விஜய கார்த்திகை 1953 நவம்பர் | இதழ் 1

உள்ளுறை


| | | |
|---|---|---|
| பெரும்பேர் ஆசான் மறைவு | ... | 497 |
| திருத்தினை நகர் | ... | 500 |
| கிழக்கும் மேற்கும் | ... | 502 |
| திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வர் | ... | 510 |
| சங்கற்ப நிராகரணம் | ... | 514 |
| அஞ்சுதல் அஞ்சாமை | ... | 518 |
| இனி அரிதே போலும் ! | ... | 526 |
| பிரிவாற்றுமை | ... | 529 |
| செய்[illegible] | ... | 531 |
| ஆசிரியர்கள் வரலாறு | ... | 537 |


JL
R673 [illegible] 11, N28
N53.26.11.
186896

[illegible]. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
[illegible]சிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.
[illegible]ய சித்தாந்த மகா சமாஜம்
[illegible]யிட் ரோடு, இராயப்பேட்டை, சென்னை-14

## சமாஜ அறிக்கைகள்

சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம் 31—10—53-ல் சென்னை இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்த ஜன சபையின் குகானந்த நிலையத்தில் கூடிற்று.

திருவாளர் தி. க. சுந்தரம் பிள்ளை அவர்கள் சமாஜத்தின் பொருட் காப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் சமாஜ நிருவாக சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சமாஜத்தின் அடக்கவிலைப் பதிப்புக்களாகிய சித்தாந்த அஷ்டகம், திருப்போரூர் சந்நிதி முறை, பெரியபுராணம், ஆகிய நூல்கள் கீழ்க் கண்ட இடங்களில் கிடைக்கும்.

(1) சைவ சித்தாந்த மகா சமாஜக் காரியாலயம்,
192, லாயிட்ஸ் ரோட்,
சென்னை 14.

(2) திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், B.A., B.L.,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை–1

(3) திரு. தி. க. சுந்தரம் பிள்ளை
18, படேல் ரோட்,
பெரம்பூர், சென்னை.

**புத்தகம் வேண்டும் வெளியூர் அன்பர்கள் திரு. தி. க. சுந்தரம் பிள்ளைக்கு எழுதவும்.**

**1954 வருஷத்திற்குச் சந்தா அனுப்புவோர் டிஸம்பர் மாதத்திற்குள் சந்தாத் தொகையை, திரு. தி. க. சுந்தரம் பிள்ளை, 18, படேல் ரோட், பெரம்பூர், சென்னை என்ற விலாசத்திற்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

மணியார்டர் அனுப்புவோர், மணியார்டர் கூப்பனில் தாம் அனுப்பும் தொகையையும், தம் முழு விலாசத்தையும் குறிப்பிட வேண்டும்.

Regd. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு

மலர் 26 | விஜய கார்த்திகை 1953 நவம்பர் | இதழ் 1

## பெரும்பேர் ஆசான் மறைவு

'பட்டகாலிலே படும்' என்ற பழமொழிக்கு இலக்காகச் செந்தமிழ் மக்கள் தவக்குறைவினால் தமிழ்ப் பெரியார்கள் ஒருவர்பின் ஒருவராக நம்மைவிட்டு விலகுகிறார்கள். அண்மையிலே திரு. வி. க. அவர்கள் மறைந்தார்கள். தமிழ்மக்கள் ஆற்றாத துயரத்தினால் அழுந்திக் கொண்டிருக்கையில் அத்துயரக் கண்ணீர் ஆறுவதற்கு முன்பே முதுபெரும் புலவர் பண்டிதமணி அவர்கள் நம்மைவிட்டு அகன்றுவிட்டார். இந்தத் தவக்குறையை எவரிடம் சொல்லுவது? எப்படி ஆறுதல் அடைவது?

தமிழ் அறிஞர்களிலே பெரும்பேர் ஆசான் (மகாமகோபாத்தியாயர்) என்ற விருது அளிக்கப்பெற்றவர்கள் இருவரே. அவ்விருவரில் தூய தமிழ் மகனாராய்த் தோன்றியவர் பண்டிதமணி அவர்களே. ஆங்கிலத் துரைத்தனத்தார்களோ தமிழ்ப்புலமையை ஆதரிப்பதில் ஒரு சிறிதும் அக்கறை கொள்ளவில்லை. மற்ற மொழிகளுக்கு அவர்கள் தந்த ஆதரவில் ஒரு கூறும்கூட தமிழுக்குத் தரவில்லை. தமிழோடு வடமொழிப் பயிற்சியும் பெற்ற ஒரு காரணத்தைக்கொண்டே தமிழை இரண்டாந்தரமாகப் போற்றினார்கள். பண்டிதமணியவர்களும் வடமொழியில் பாண்டித்தியம் பெற்றவகையில் தமிழையும் ஆதரிக்கலாமென்று ஒரு கட்டுப்பாட்டில் அவ்வுயரிய பட்டம் பெற்றார்கள்.

அப்பெருமை பொருந்திய பட்டம் பெற்ற பண்டிதமணி அவர்கள் தமிழ் மக்களுக்காக ஒப்பற்ற எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்கள் என்று நாம் இறுமாப்போடிருக்கையில் திடீரென்று நம்மைவிட்டு அழைத்துக்கொள்ளப் பட்டார்.

பாண்டிய நாட்டில், சங்கச் செய்யுளால் புகழ்பெற்ற பூங்குன்ற நாட்டின் தலைநகராகிய மகிபாலன்பட்டியில் விசு, புரட்டாசி இரண்டில் முத்துக்கருப்பன் செட்டியாருக்கும் சிகப்பி ஆய்ச்சிக்கும் மகனாராய், கதிரேசன் செட்டியாரவர்கள் சிவனுக் குரித்தாகிய திருவாதிரை நாளில் தோன்றினார்கள். தமது இளமைப்பருவத்திலேயே தங்கள் குலத்திற்கேற்ப இலங்கைக்குச் சென்று வாணிப முறையில் ஈடுபட்டார். தமது 14-வது ஆண்டில் தந்தையார் சிவபதம் எய்த தமது ஊருக்குத் திரும்பிவிட்டார்கள். அது முதல் தமிழ்ப் பயிற்சியிலேயே முழுப்பொழுதையும் கழிக்கத் தொடங்கினார்கள். தாம் வழிபடும் கடவுளாகிய விநாயகப்பெருமானையே ஆசிரியராக உள்ளத்தில்கொண்டு தமிழ் ஆராய்ச்சி செய்தார்கள். தமிழில அவர்கள் கல்லாத நூலில்லை. ஆராய்ச்சி செய்யாத பொருளில்லை. பெரும் புலவர்களோடு பழகிவந்ததில் அரசஞ் சண்முகனார் போன்ற பேரறிஞர்களின் கூட்டுறவு கிடைத்தது.

தமிழ் இலக்கியங்களை அன்றி, சித்தாந்த நூல்கள், திருமறைகள், முதலியவைகளை ஆராய்ந்தார்கள். வடமொழியை நன்றாய்க் கற்றுக் காவியங்களோடு ஆகமங்களும் பயின்றார்கள். அவருடைய வடமொழிப் பயிற்சி அறிந்து இராமேசுவர அறநிலைய வடமொழிக் கல்லூரியில் ஆலோசனைக் குழு உறுப்பினராக நியமிக்கப் பட்டார்கள். வடமொழியிலிருந்து சுக்கிர நீதியைத் தமிழ் ஆக்கினார்கள். தென்னாட்டிலுள்ள எல்லாக் கல்வி நிலையங்களிலும் உறுப்பினராகவும் தேர்வாளராகவும் ஏற்படுத்தப்பட்டார்கள். பல ஆண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும் உழைத்தார்கள். சென்னைப் பல்கலைக் கழகம், திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகம், இலங்கையில் பல கழகங்கள் [illegible] இவைகளிலெல்லாம் உறுப்பினராகவும் ஆராய்ச்சி[illegible] தேர்வாளராகவும் இருந்துவந்திருக்கின்றார்.

188896



கணக்கற்ற கழகங்கள், மகாநாடுகள் ஆண்டுவிழாக்கள் முதலியவைகளில் தலைமைவகித்து அரிய பெரிய உரைகளை நிகழ்த்தி யிருக்கின்றார். சைவ சித்தாந்த சமாஜத்தைப் பொருத்தின மட்டில் 'கணக்கற்ற தடவைகளில் அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்தியது மன்றி. இருமுறை சமாஜ விழாக்களில் தலைமை வகித்திருக்கின்றார். சமாஜத்தின் வெள்ளிவிழாவான 25-வது ஆண்டு விழாவில் 1930-ம் ஆண்டில் சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் நடந்த மூன்று நாள் கூட்டங்களில் தலைமை வகித்து அரிய விரிவுரைகளை நிகழ்த்தியிருக்கின்றார். பிறகு இரண்டாம் முறையாக சமாஜத்தின் 37-வது ஆண்டுவிழாவில் 1942-ல் சீகாழித் திருப்பதியில் நடந்த அரிய கூட்டத்தில் பேருரை வழங்கித் தலைமை வகித்தார்கள்.

1949-ல் பண்டிதமணி அவர்களின் மணிவிழா கொண்டாடப்பட்டது. அப்போது அவருடைய பேருதவியைப் போற்றும் வண்ணம் ஒரு மணிமலர் வெளியிடப்பட்டது. 29 மிகச்சிறந்த கட்டுரைகள் அடங்கிய அக்கட்டுரைத் தொகுதி செட்டிநாட்டரசர் இராஜா. சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தலைமையில் வெளியிடப்பட்டது.

தமிழ் அன்னைக்கு அவர்கள் அணிவித்த பாமாலைகள் பல. விநாயகர் பதிகம், மாலை, பதிற்றுப்பத்து முதலிய செய்யுள் நூல்கள் அரிய கருத்துக்கள் கொண்டவை. சுலோசனை, உதயணசரிதம், சுக்கிரநீதி என்பன மொழிபெயர்ப்புக்கள். வடமொழியில் சிறந்த நாடகமாகிய 'மிருச்சகடிகை' என்பதை 'மண்ணியல் சிறுதேர்' என்ற பெயரில் தமிழ் நாடகம் ஆக்கியிருக்கின்றார். அது உயர்ந்த செய்யுள் நடைகொண்டது. இவைகளே அன்றிக் கணக்கற்ற கட்டுரைகளை எழுதியிருக்கின்றார்.

அவர்கள் ஓய்வு எடுத்துக்கொண்ட பிறகு தமிழுக்குச் செய்துவந்த தொண்டு மிகச் சிறந்தது. திருவாசகத்திற்கு ஓர் ஒப்பற்ற உரை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை இவைகளுக்கு ஏற்கனவே பேர் உரை வெளிவந்துள்ளது. மற்றப் பகுதிகளுக்கு உரைகள் எழுதிக்கொண்டிருக்கையிலேயே அவர் மறைந்துவிட்டது தமிழ்நாடு செய்த தவக் குறைவே ஆகும்.

எழுதுவதில் மட்டுமல்ல, பேசுவதில் மிகச் சிறப்பு வாய்ந்தவர். மாணாக்கர்களுக்குக் கற்பிப்பதில் அளவுகடந்த ஊக்கத்தோடு நுண்ணிய பொருள்களை விரித்துரைப்பார். பெருங் கூட்டங்களிலே எப்படிப்பட்டவர்களையும் ஊக்கும் படியான நகைச்சுவை மிளிர்ந்த உரைநடையைக் கொண்டு விளக்குவார். சிதம்பரத்தில் நடந்த சைவ சித்தாந்த கோடைக்கால வகுப்பின்போது பண்டிதமணி அவர்கள் விளக்கிய சித்தாந்தக் கருத்துக்கள் கேட்டவர் காதில் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. பண்டிதமணி யவர்கள் இயற்கையிலேயே உடல் நலம் குன்றியிருந்த போதிலும் தமது உள்ளத்தின் ஆற்றலினால் கணக்கற்ற ஊர்களுக்குச் சென்று தமிழ்த் தொண்டிலும், சைவத்தொண்டிலும் ஈடுபட்டு வந்ததை அறிய எவரும் வியப்பார்கள்.

அப்படிப்பட்ட பேரறிஞர் நம்மைவிட்டு விலகினது ஆற்றொணாத் துயரம் தருவதாகும். அவருடைய ஆன்மா பெருமான் திருவடியில் சாந்தி பெறுவதாகுக!

---

# திருத்தினை நகர்

1. இடம் : தென் ஆர்க்காடு வட்டத்தில் சிதம்பரத்திலிருந்து கூடலூர் போகும் ரயில் பாதையில் பரங்கிப்பேட்டை நிலயத்திலிருந்து வடமேற்கே ஏழு கல்லிலும், ஆலப்பாக்கம் நிலயத்திலிருந்து தென்மேற்கே ஐந்து கல்லிலும் உள்ளது. பிந்திய வழி சிறந்தது. நிலயத்திலிருந்து தெற்குப் பெரும் பாதைக்கு முதலில் செல்லவேண்டும். அங்கிருந்து மூன்று கல் மேற்கே சென்றால் ஊரை அடையலாம். ஊர் சிறிய தானாலும் சுற்றிலும் நன்செய் நிலங்கள் உண்டு. ஊரின் பெயர் 'தீர்த்த நகரி' என்று தற்போது மருவியிருக்கின்றது.

2. கோயில் : ஊர் நடுவிலுள்ளது. நாற்புறமும் நான்கு தெருக்கள் உண்டு. தெருக்கள் தூய்மையாய்



வைக்கப்படவில்லை. கோயிலின் தலைவாயில் கட்டப்படவில்லை. முன்கோபுரம் தாழ்ந்திருக்கின்றது. கர்ப்பக்கிரகம் மிகப் பழமையானது. அதனைச் சுற்றி மண்டபம் கிடையாது. அடிப்பகுதியில் கல்வெட்டுக்கள் உண்டு. பிள்ளையார் முருகன் ஆலயங்கள் தனியாக இருக்கின்றன. மகா மண்டபத்தைவிட மூலத்தானம் உயரத்திலிருக்கின்றது. மூன்று அடி உயர்த்திக் கட்டினால் நன்றாக இருக்கும். இறைவியினுடைய ஆலயம் தனியாக இருக்கின்றது தெற்குச் சந்நிதி கொண்டது. 50 ஆண்டுகளுக்குமுன்பு 6000 ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டது. ஆனால் வேலை பூர்த்தியடையவில்லை. அம்மனுடைய திருவுருவம் 5 அடி உயரமுள்ள தாகவும், நிரம்ப அழகுள்ளதாகவும் இருக்கின்றது.

3. மூர்த்திகள் : சுவாமியின் பெயர் சிவக்கொழுந்தீசர்; திருந்தீசுவரர் என்ற பெயரும் உண்டு. சிவக்கொழுந்து என்பது தேவாரப் பெயர். வடமொழியில் சிவாங்குரேசர் என்றுபெயர். தேவியின் பெயர் இளங்கொம்பன்னாள். தீர்த்தம் ஜாம்புவ தீர்த்தம். விருக்ஷம் கொன்றை. அது மிகப் பழமையானது. ஒரு லிங்கம் பாலாலயத்திலிருக்கின்றது.

4. ஐதீகம் : பள்ள சாதியில் அவதரித்த பெரியான் என்ற சிவனடியார் நிலத்தை உழுதுகொண்டிருந்தபோது இறைவன் அங்கே எழுந்தருளி வந்து தமக்கு அன்னம் வேண்டும் என்று கூறி ஊருக்குச் சென்று அதைக் கொண்டு வரும்படி சொல்லி அனுப்ப அவர் மீண்டும் வருவதற்குள் புலத்தில் தினை விளைந்திருக்கச் செய்து அனுக்கிரகித்தனராம். இந்தச் சரிதை கோயிலின் தென்புறச் சுவரில் கல்லில் செதுக்கப்பட்டிருக்கின்றது. சிற்பம் தெளிவானது.

5. பாடல் : சுந்தரமூர்த்திகள் 7-ம் திருமுறையில் தக்கேசிப்பண்ணில் 'நீறுதாங்கிய திருநுதலானை' என்ற பதிகம் அருளியிருக்கின்றார். மேலும் இந்தத் தலத்திற்கு ஒரு புராணம் இருந்ததாம். அது ஞானியார் மடத்தில் இருக்கிறதென்பர்.

6. கல்வெட்டுக்கள் : இக்கோயிலில் [illegible] தென் ஆர்க்காடு ஜில்லா நூலில் கா[illegible]கின்றது. ஆ[illegible]துக்

கல்வெட்டுக்களில் பதின்மூன்று படி எடுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்ச் செய்யுளில் உள்ள ஒரு கல்வெட்டு காடவர்கோன் வரி தள்ளுபடி செய்ததைக் குறிக்கின்றது. சோழர்களில் குலோத்துங்கச் சோழன் III (1178 – 1216) என்பவனுடைய 19,21-ஆண்டுகளில் செய்த பூதானங்கள் கூறப்பட்டுள்ளன. பாண்டியரில், மாறவர்மன் வீர பாண்டியன், சுந்தரபாண்டியன், விக்கிரம பாண்டியன் என்பவர்களுடைய கல்வெட்டுக்கள் இருக்கின்றன. வீர பாண்டியன் கல்வெட்டு ஒன்றில் திருநாவுக்கரசு தேவருடைய உற்சவத்திற்காக வரி தானம் செய்யப்பட்டதாம். மேலும் காடவன் கோப்பெருஞ் சிங்கனுடைய கல்வெட்டு ஒன்றிருக்கின்றது. கோபுர வாயிலில் ஒரு தமிழ்ச் செய்யுள் கல்வெட்டு இருக்கின்றது. மேலும் கிருஷ்ணதேவராயன் காலத்து (சகம் 1439) கல்வெட்டில் அரசனுடைய வெற்றிகளும் 10,000 வராகன் வரி தள்ளுபடியும் கண்டிருக்கின்றன.

---

# கிழக்கும் மேற்கும்

1. நமது கருத்துக்கள் :—மேலே தலைப்பில் குறித்திருக்கும் இரண்டு சொற்களில் கிழக்கு என்பதைக் கீழ்நாடுகள் என்றும், மேற்கு என்பதை மேல் நாடுகள் என்றும் பொதுவாகக் கூறுவோம். கீழ் நாடுகளிலே சிறப்பாக பாரதத்தையும், மேல் நாடுகளிலே சிறப்பாக அமெரிக்காவையும் எடுத்துக்கொள்ளுவோம். பாரததேசத்தின் தற்கால நிலையை உயர்த்தவேண்டும் என்பது நமது பெரியோர்களின் கருத்து. அதற்காக ஐந்தாண்டு திட்டங்கள் வகுத்துக்கொண்டு அவற்றை நிறைவேற்றிச் செயல் முறைக்குக் கொண்டுவர வேண்டுமென்பது அரசியலாரின் கருத்து. அதில் பெரும்பான்மையாக உலகிய நோக்கமே முன்னேறியிருக்கின்றது. ஆனால் நாம் இங்கே ஆன்மீக நோக்கத்தையும் எடுத்துக்கொண்டு சிந்திப்போம். இனி மேற்கு நாடுகளில் வெள்ளையர்கள் பொதுவாக மேம்பாடு அடைந்திருக்கையில் அமெரிக்காவை ஏன் எடுத்துக்கொண்டோமென்



றால் தற்காலத்தில் பொருள் ஆதார நிலையில் அமெரிக்காவே சிறந்த நிலையில் இருக்கின்றதென்று அறிவோம். ஆகவே அந்நாட்டைத்தான் எடுத்துக் காட்டாக வைத்துக்கொள்ள வேண்டும். நமது நாட்டின் எதிர்கால நிலையைக் குறித்து ஆராய வேண்டுமாயின் தற்காலத்தில் அமெரிக்காவைத்தான் குறிக்கோளாக வைத்துக்கொண்டு தீர்வு காண வேண்டியிருக்கின்றது. பொருள் ஆதார நிலையாகிய உலகிய விவகாரங்களில் அமெரிக்கா சிறப்புற்றிருப்பதைச் சென்ற இரண்டு பெரும் போர்களிலும், தற்போதைய கொரியாப் போரிலும் நன்கு அறிந்தோம். இதுவரைக்கும் உலகிலேயே பேரரசாகவிருந்த ஆங்கில தேசம் தற்போது தளர்ச்சியடைந்து அமெரிக்காவின் நன்மொழிகளை நாடிக்கொண்டிருக்கிறது. பொருளாதார முறைகளில் எந்தப் பகுதி எடுத்துக்கொண்டாலும் உலக நாடுகள் எல்லாமே அமெரிக்காவின் முகத்தை நோக்கிக்கொண்டிருக்கின்றன. இனி நாம் எண்ணிக்கொண்டிருப்பது என்னவெனில் பொருளாதார நிலையில்மட்டும் அமெரிக்கா மேம்பாடு அடைந்திருக்கிறதென்றும், மற்றொரு கூறு ஆகிய ஆன்மீக நிலையில் கீழ் நாடுகளின் பிரதி நிதியாக நம்மை வைத்துக்கொண்டு நாம் தான் ஆன்மீகத்தில் சிறப்படைந்து இருக்கின்றோம் என்றும் பெருமிதத்தில் கூறிக்கொண்டு வருகின்றோம். ஆனால் அது உண்மைதானா? ஆன்மீகத்தில் நம்மைவிட அமெரிக்கர்கள் தாழ்ந்திருக்கிறார்களா என்ற கேள்வி ஒன்று நம் கண்முன் தோன்றுகிறது. நம்மில் வைதீகர்களாக இருக்கும் முதியோர்கள் அமெரிக்காவின் மேம்பாட்டை ஒத்துக்கொள்ளவே மாட்டார்கள். "நம்முடைய சமயம், அதிலுள்ள பற்று, நமது சமய நிலையங்கள் அவைகளின் சிறந்த நோக்கம், நமது சமய நூல்கள், அவைகள் காணும் உண்மைகள், நமது தொண்டர்களின் வரலாறுகள் இவைகளை எல்லாம் எடுத்துக் கூறி நம்மைப் போல அமெரிக்கர்களிடம், இவைகள் முதிர்ச்சி பெறவில்லை." என்று எடுத்துக் கூறுவார்கள். இதனைப்பற்றி ஒரு சிறிது ஆராய்வோம்.

2. ஆன்மீக நிலை :—ஆன்மீக நிலையென்றால் வெறும் "சமயச் சார்புமட்டுமல்ல" தத்துவக் கொள்கைகளும் ஒழுக்கக் கொள்கைகளும் அதில் அடங்கியிருக்கின்றன.

இங்கிலைகளைப்பற்றி நாம் ஆராய்ச்சி புரியும்போது நம்மோடு ஒப்பு நோக்கத்தக்க நாடு அமெரிக்காதான் ஆகும். நாளது வரை பெரிதாக நினைத்துக்கொண்டிருந்த ஆங்கில நாட்டோடு நாம் ஒப்பு நோக்குவது சரியல்ல. அதற்கு ஒரு சிறந்த காரணம் எதிரே நிற்கின்றது. உலகில் சில நாடுகளில் அரசியல் சமயத்தோடு உடனுயிருந்து தொழிற்படுகின்றது. சில நாடுகளிலோ அரசியலுக்கும் சமயத்திற்கும் இணைப்பு இல்லை. வெள்ளையரில் ஆங்கிலர்கள் ப்ராடஸ்டண்ட் சமயத்தில் இணைப்பு கொண்டிருக்கின்றார்கள். கீழ் நாடுகளில் பாக்கிஸ்தானும் இஸ்லாம் சமயத்தோடு பிணைப்புக் கொண்டிருக்கின்றது. நமது பாரத நாடோ சமயப் பற்று இல்லாத நாடு என்று பேரொலி செய்து கொண்டிருக்கின்றது. ஆகவே இங்கிலாந்தையும், பாக்கிஸ்தானையும் நம்மோடு ஒப்பு நோக்க வகையில்லை அல்லவா ? இனி நம்மைப் போல சமயப்பற்றில்லாத மேல் திசை நாடு யாதெனில் அமெரிக்காதான். அதனோடு ஒப்பு நோக்குதலே சால்புடைத்து ஆகும். இவ்வாறு ஒப்பு நோக்குகையில் நமது நாட்டில் ஆன்மீக நிலைகள் எந்த நிலையில் இருக்கின்றன என்பவற்றை ஆராய்ந்து ஒப்பு நோக்குவதே பொருத்தமாகும். அவ்வாறு ஆராய்வதில் சமய நிலைமட்டுமன்று, சமயத்தில் மக்களுடைய ஈடுபாடு மட்டுமன்று, தத்துவம், ஒழுக்கம், முதலியவைகளையும் ஆராய வேண்டிவரும். அப்படி ஆராய்வதில் சில புள்ளி விவரங்களையும் எடுத்துக் கூறுவோம்.

**3.** சமய நிலை :—சமய ஈடுபாட்டைக் குறித்து சிந்திக்கும்போது அமெரிக்காவுக்கும் பாரதத்திற்கும் மற்றொரு ஒற்றுமையும் இருக்கின்றது. பாரதத்தில் பெரும்பான்மையான சமயம் இந்து சமயம் ஆகும். சிறுபான்மையில் பெரிதாகவுள்ளது இஸ்லாமிய சமயமாகும். அதிலுள்ள மற்ற சமயங்களோ கிறிஸ்தவம், ஜைனம், பாரசீகம், சீக்கியம், பௌத்தம் முதலியன. இந்து சமயத்திலும் சைவம், வைணவம் என்ற இரண்டு பெரிய பகுதிகளோடு, அத்துவிதம் மாத்துவம், சாக்தேயம், முதலிய சிறு பகுதிகளுமுண்டு. ஆகவே பாரதத்தில் ஒரே ஒரு சமயமில்லாமல் பல சமயங்கள் கலந்திருக்கும் நிலையைக் காண்கின்றோம். இனி அமெரிக்காவிலும், இதைப் போன்ற நிலைமையே இருக்கின்றது. அமெரிக்கர்கள் பெரும்பான்மையாகக் கிறிஸ்தவர்களாக இருந்தபோதிலும் அவர்களில் கணக்கற்ற சமய வேறுபாடுகள் உண்டு. இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிற்கு முதல் முதலில் குடியேறின மக்கள் சமய உரிமையைக் காரணமாகக் கொண்டே அந்நாட்டிற்குச் சென்றார்கள். அவ்வாறே பிரான்சு முதலிய நாடுகளிலிருந்தும் மக்கள் குடியேறினார்கள். தங்கள் நாடுகளில் தங்கள் இச்சைப்படி தாங்கள் விரும்பின சமயக் கொள்கைகளின்படி வாழவொட்டாமல் தடுத்ததினால் அம்மக்கள் தாங்கள் முழு உரிமையோடு வாழ்வதற்காகவே அமெரிக்கா சென்றார்கள். அவ்வாறு சென்றவர்கள் பல வேறுபாடுகள் உடைய சமயங்களைச் சார்ந்தவர்கள். அவர்கள் மிகுந்த சமயப் பற்றுக்கொண்டவர்கள் ஆனதினால் அன்னார்களுடைய சந்ததியார்கள் அப்பற்று சிறிதேனும் குறைவில்லாமல் இன்றைக்கும் சிறந்து விளங்குகிறார்கள். இவ்வாறு குடியேறினவர்களில் கிறிஸ்தவர்கள் மட்டுமே யல்லாமல் யூதர்களும் அங்கே சென்றிருக்கின்றார்கள். மற்றும் இஸ்லாமியரும் சில இந்துக்களும் அங்கே குடிசென்றிருப்பதை அறிவோம். இஸ்லாமியரில் சிறப்பாக பாஹாய் வகுப்பார்கள் நூற்றுக்கணக்கான தொழுகை இடங்களைக் கட்டியிருப்பதன்றி ஒரு நடு நாயக நிலையத்தையும் சிகாகோ நகரத்தில் கட்டியிருக்கிறார்கள். யூதர்களுடைய ஆலயங்கள் அங்கே கணக்கின்றி இருக்கின்றன. மேலும் சீன நாட்டிலிருந்தும், ஜப்பானிய நாட்டிலிருந்தும் கணக்கற்ற பௌத்தர்கள் சென்றிருக்கின்றார்கள். நமது பாரதத்திலிருந்து விவேகாநந்த அடிகள் அந்நாட்டிற்குச் சென்று அத்வைதத்தைப் பரப்பி யிருக்கின்றார். இவ்வாறாகக் கணக்கற்ற சமயங்கள் ஆட்சி பெற்றிருப்பது அமெரிக்கா ஆகும். இந்தியாவில் எவ்விதமாக எல்லா சமயத்தார்களும் தங்கள் தங்கள் இச்சைப்படி சமயக் கொள்கைகளை அனுசரிக்க முடியுமோ அவ்வாறாக அமெரிக்காவிலும் குடிகள் தங்கள் தங்கள் இச்சைப்படி சமயக் கொள்கைகளை அனுசரிக்க உரிமையுண்டு. இதில் ஒற்றுமையிருக்கிறதல்லவா ? இந்தக் காரணத்தினால்தான் இந்த இரண்டு நாடுகளிலும் அமைந்

துள்ள அரசியல் முறைகள் சமயச் சார்பற்றவைகளாக இருக்கின்றன எனலாம்.

4. மொழி நிலைமை :—நாகரிக முற்றநாடுகளுக்கு மொழி ஒரு இன்றியமையாத சாதனமாகும். மொழியில் ஒருவருக்கு இருக்கும் ஆர்வம் வேறு எதிலேயும் இல்லையெனலாம். ஒரு மொழியில் பிறந்து, அம்மொழியே கையாண்டுவரும் ஒருவன் அம்மொழி பயிலாத பிறநாட்டிற்குச் சென்று வாழுங்கால் நூற்றாண்டுகள் கணக்கில் தன் தாய்மொழியை மறக்கமாட்டான். இவ்வகையான நிலைமையில் மொழியின் பற்று இருக்க, பாரதத்திலும், அமெரிக்காவிலும் மொழியின் சிறப்பு எவ்வாறு இருக்கிறதென்பதை ஒரு சிறிது சிந்திப்போம். பாரதத்தில் கணக்கற்ற மொழிகள் பேசப்படுகின்றன. அவ்வாறு பேசப்படும் மொழிகள் பத்துக்குக் குறையாமல் பெரிய சமுதாயங்களைத் தம்முள் அடக்கிக் கொண்டிருக்கின்றன. இவ்வித நெல்லிக்காய் மூட்டைகளைப் பிணைத்துக்கொண்டிருந்த கோணிச்சாக்கு ஆங்கில ஆட்சியும் அவர்கள் கொண்டு வந்து புகுத்தின ஆங்கில மொழியுமே ஆகும். நமக்குத் தன்னுரிமை கிடைத்த பிறகு மொழி இயக்கத்தில் ஒரு வேறுபாடு ஏற்படப் போகிறதாம். ஆங்கிலத்திற்கு மாறாக இந்தி வரப் போகிறதாம். இவ்வாறு நமது நாட்டின் மொழி நிலைமை இருக்க, அமெரிக்காவின் நிலைமையும் இதே அளவில் இருக்கின்றது. அங்கே ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மானியம் டச்சு, இஸ்பானியம் முதலிய பல மொழிகள் பேசப்படுகின்றன. ஆனால் அவர்கள் எல்லாருக்கும் அரசியல் மொழியாக ஆங்கிலம் ஏற்பட்டிருக்கின்றது. மேலும் அமெரிக்காவின் பண்டைக் குடிகளாகிய சிவப்பு இந்தியர்கள் பலமொழிகளைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இனி பண்ணை ஆள் வேலைக்குக் கவர்ந்து செல்லப்பட்ட அடிமையாட்கள் ஆன ஆப்பிரிக்கா நீக்ரோக்கள் பலமொழிகளைப் பேசிக்கொண்டிருந்தவர்கள். இவர்கள் அமெரிக்கா சென்ற பிறகு ஆங்கிலமொழியைக் கற்றுக் கொண்டார்கள். தங்களுக்கென, தொழில் நிலையங்களையும் கல்வி நிலையங்களையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அமெரிக்காவில் பல மொழிகள் வழங்கினபோதிலும் ஆங்கிலம் பொதுமொழியாக இருக்கின்றது. இந்த



வகையிலும் பாரதமும் அமெரிக்காவும் ஒப்பு நோக்கத்தக்கதாக இருக்கின்றன.

**5.** ஒப்பு நோக்கு :—மேலே கூறியவகைகளில் சமய நிலைமை, மொழி நிலைமை, முதலியவைகள் எல்லாம் பாரதமும், அமெரிக்காவும் ஒத்த நிலையில் இருப்பதை அறிந்தோம். இவைகளில் பாரதமோ பண்டைய நாகரிகத்தைக் கொண்டுள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளைக் கண்ட வரலாற்றைக் கொண்டது. அமெரிக்காவோ புதிய நாகரிகத்தைக் கொண்டது. முந்நூறு ஆண்டுகளில் வளர்ந்த வரலாற்றைக் கொண்டது. என்றாலும் ஒப்பு நோக்கத்தக்க மற்றொரு சிறப்பு இந்த இரண்டிற்கும் உண்டு. பாரதம் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளைக் கண்ட வரலாற்றைப் பெற்றிருந்தும் சென்ற நூறு ஆண்டுகள் அளவில்தான் ஒற்றுமையுற்று வளர்ச்சி பெற்றிருக்கின்றது. அதிலும் ஐந்து ஆண்டுகளாகத்தான் சுதந்திரம் பெற்றிருக்கின்றது. அமெரிக்காவிலோ இருநூறு ஆண்டுகளாகக் குடியரசு தோன்றிய நூறு ஆண்டுகளாகத்தான் முழு ஒற்றுமை தோன்றியிருக்கின்றது. ஆகவே இரண்டு நாடுகளையும் புது நாடுகளாகவே நாம் கருதி ஒத்துப் பார்க்கலாம். அமெரிககா தற்காலத்தில் செல்வத்திலும், அறிவிலும் சிறந்து நிற்கிறது. பாரதமோ செல்வத்தில் குறைந்து, இருக்கிறதை அறிந்து, இனி செல்வம் படைக்க வேண்டுமென்று எண்ணுகிறது. அறிவிலும் குறைவில்லாதிருக்கின்றது. ஆனால் ஓர் அடிப்படையான பண்பில் இரண்டும் வேறுபட்டு வருகின்றது. அது என்னவென்று குறிப்பாகக் கூறுவோம்.

**6.** அடிப்படை வேற்றுமை :—அமெரிக்காவின் அரசியல் சமயக் கொள்கைகளில் ஈடுபட்டிருக்காதிருந்தும், அமெரிக்க மக்கள் சமயத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்று அறியவேண்டும். பாரதத்தின் ஆட்சியிலும் சமய ஈடுபாடு இல்லை. மக்களோ ஆயிரமாயிரம் ஆண்டுகளாக சமயத்தில் ஈடுபட்டிருந்தும் தற்போது அது வேண்டாமென்கிறார்கள். அரசியற் பெரியார்கள் சமயத்தைப் பற்றி நினைப்பதேயில்லை. பொதுமக்களில் கணக்கற்ற பிளவுகள் தோன்றிப் பெரும்பாலோர்கள் அதை நினைப்பதே.

யில்லை. போதாக் குறைக்குச் சமயம் வேண்டாம் என்ற கிளர்ச்சியும் ஏற்பட்டு வருகின்றது. சில எடுத்துக்காட்டுகளைக் கூறுவோம்.

(a) அமெரிக்காவில் நூற்றுக் கணக்கான சமய பேதங்கள் இருந்தாலும் பொதுவாகப் பரவியுள்ளது கிறிஸ்து சமயம். கிறிஸ்தவர்களுடைய மறையானது பைபில் (Bible) என்ற பெயரால் வழங்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் அங்கே 25–கோடி பொது அறிவு நூல்கள் விற்கப்படுகின்றன. அவைகள் எல்லாவற்றிலும் அதிகமாக விற்கப்படும் நூல் பைபில் ஆகும். பாரதத்தில் அந்த வகையில் எந்த நூல் விற்கப்படுகின்றது? வட இந்தியாவில் நான்கு வேதங்களை எத்தனை வீடுகளில் காணலாம். அல்லது பொதுவாக மதிக்கப்படும் பகவத் கீதை எத்தனை மக்கள் கையில் இக்கின்றது? இனி, தென் இந்தியாவில் சைவத் திருமுறைகளும் வைணவப் பிரபந்தமும் எத்தனை வீடுகளில் இருக்கின்றன? அடக்க விலைப்பதிப்பு வெளியிட்டும் ஒரு நூறாயிரம் பிரதிகளும் தமிழ் நாட்டுக் கோடிக்கணக்கான மக்களிடை செலவாகவில்லை. ஆகவே, நமது நாட்டில் சமயப்பற்று எந்த நிலையில் இருக்கின்றது என்று அறியலாம்.

(b) இனி சமயப்பற்றை விளக்கும் ஒரு செய்தி ‘ஆலயம் தொழுவது’ ஆகும். அமெரிக்காவில் 16–கோடி மக்களுக்கு 9–கோடி மக்கள் ஆலயங்களுக்குத் தவறாமல் செல்லுகின்றார்கள். அதாவது பத்துபேருக்கு, 6 பேருக்குக் குறையாமல் ஆலயம் சென்று வழிபடுகின்றார்கள். வாரத்திற்கு ஒருநாள் அதாவது ஞாயிற்றுக்கிழமையன்று ஆண் பெண் குழவி உட்பட ஆலயம் செல்லுகிறார்கள். அதற்குத் தக்கபடி ஆலயங்களும் நல்ல நிலைமையில் அமைந்திருக்கின்றன. மக்கள் பெருகப் பெருகப் புது ஆலயங்கள் கட்டப்படுகின்றன. அங்கே நாள் ஒன்றுக்குப் புதிதாக ஐந்து ஆலயங்கள் தோன்றுகின்றனவாம். அதற்கேற்றபடி பொருள் செலவழிக்கப்படுகின்றது. பல்லாயிரக் கணக்கான மக்களுக்குச் சமயத்தொழிலில் வேலைக் கிடைக்கின்றது. அதற்குப் பயிற்சி தரும் கல்லூரிகளும் இருக்கின்றன. ஆனால் பாரதத்திலோ முசிலிம் அல்லாதவர்கள் எத்தனை பேர் ஆலயங்களுக்குச் செல்கின்றார்கள். ஆலயங்களுக்குச்



செல்லப்படும் நிலைமையில் அவைகள் இருக்கின்றனவா? அங்கு ஊழியும் செய்பவர்கள் நேர்மையான பயிற்சி பெற்றிருக்கின்றார்களா? இந்த இரண்டையும் ஒத்துப் பார்த்தால் அமெரிக்காவைவிடப் பாரதம் மிகத் தாழ்ந்திருக்கிறதென்று கூறவேண்டாமா?

(c) இனி, பாரதத்தில் சமயப்பயிற்சிக்காக ஆசிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் அறிஞர்கள் இருந்துகொண்டு சமய ஆராய்ச்சியும் தத்துவ ஆராய்ச்சியும் செய்து வருகின்றார்கள் என்று பெருமை பாராட்டிக் கொள்ளுகின்றோம். பண்டைக்கால ஆசிரமங்களும் மடங்களும் நல்ல நிலைமையில் இருந்திருக்க வேண்டும். அவ்வாறு இருந்தனவென்று நூல்களும் கூறுகின்றன. ஆனால் இன்றைய ஆசிரமங்களும், மடாலயங்களும் எந்த நிலைமையில் இருக்கின்றனவென்று நாம் அறிவோம். பெரும்பான்மையான நிலயங்களைப் பற்றி வெளிப்படையாகக் கூற நா எழுவதில்லை. எழுதவோ கை கூசுகின்றது. ஆனால் அமெரிக்காவிலோ வேறு விதமான நிலைமை காண்கிறது. அமெரிக்காவிலும் கானடாவிலும் தற்போது கணக்கற்ற சமய ஆசிரமங்கள் தோன்றியிருக்கின்றன. சுவாமி விவேகாநந்தரின் பிரசாரங்களினாலும் பாரதத்தைப் பார்த்துவிட்டுச் சென்ற அமெரிக்க உபதேசிகர்கள் உழைப்பாலும் அங்கே ஆசிரமங்கள் தோன்றி யிருக்கின்றன. அவைகளில் சமயப் பயிற்சி சமய சாதனம் முதலியனவைகள் போற்றப்படுகின்றன. அடிக்கடி திருக்கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. அக்கூட்டங்களில் சமய சாதனைகள் பயிலுவிக்கப்படுகின்றன. உடற் பயிற்சியும் சிறிது நேரம் செய்விப்பதுண்டு. இந்த வகைகளில் அமெரிக்கர்கள் பாரதத்திற்குத் தாழ்ச்சி பெறவில்லை.

பாரதத்தில் சமயத் தொண்டர்களான சாதுக்கள் நிரம்ப இருக்கின்றார்கள் என்றால் அமெரிக்காவிலும் அப்படிப் பட்டவர்கள் இல்லாமல் இல்லை. பாரதத்திலோ சாதுக்கள் என்ற பெயரினால் தோன்றும் மக்களெல்லாம் சாதுக்கள் அல்ல. நூற்றுக்கு ஐந்து பேர்தான் உண்மையான சாதுக்கள் என்று கூறமுடியும். அமெரிக்காவில் அப்படியல்ல. ரோமன் காதெலிக் வகுப்பில் மடங்களில் இருப்பவர்கள் திருமணம் செய்து கொள்ளாத துறவிகள்

அவர்கள் நன்றாய்ப் படித்தவர்களாய்ச் சமய சேவையிலேயே ஈடுபட்டிருப்பார்கள். 1951-ல் 20,000 ஆண் துறவிகளும் (Monks) 1,10,000 பெண் துறவிகளும் (Nuns) இருந்தார்கள். இவர்கள் பள்ளி ஆசிரியர்களாகவும் மருத்துவச்சிகளாகவும் வேலை செய்து வருகிறார்கள். காதெலிச் மதம் மட்டுமேயன்றி பிராடெஸ்டெண்ட் மதத்திலும் கணக்கற்ற பேர் துறவிகளாக இருக்கிறார்களாம். ஆகவே இந்த வகையிலும் அமெரிக்கா முன்னேற்றம் அடைந்திருக்கின்றது.

மேலே சொன்ன எடுத்துக்காட்டுகள் சிலவற்றைக் கொண்டு ஆராய்ந்தால், மேற்கு நாடுகள் கிழக்கு நாடுகளைக் காட்டிலும் சமயப் பண்பிலும் ஆன்மீக நிலையிலும், மேற்கர்கள் கிழக்கர்களைவிடத் தாழவில்லை யென்று கூறலாமல்லவா? கீழ்நாடுகள் முன்னிருந்த நிலைமைக்கு வர முடியுமா என்று நாம் சிந்திக்கவேண்டுமல்லவா?

---

# திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வர்

(26-8-1883 - 17-9-1953)

[எஸ். வையாபுரிப் பிள்ளை]

நமது தாய்த்திருநாட்டுக்கும் தமிழன்னைக்கும் தமிழ் மக்கள் சமயத்திற்கும் தமது ஆயுட்காலம் முழுமையும் பெருந்தொண்டு புரிந்து சமீபத்தில் நம்மிடையே நின்று மறைந்துவிட்ட திரு.வி. கலியாணசுந்தரனாரை அறியாதார் இலர். இவர் ஊதியங்கருதி உழைத்துவரும் எண்ணில் கோடி மக்கள் தொகுதியில் ஒருவராக எண்ணிடற்குரியரல்லர். மக்களை அவர்கள் கொண்ட குறிக்கோளிலே சென்றெய்துமாறு முன்னின்று நடத்தவல்ல தலைமக்கட்குரிய பண்புகள் பலவும் இயல்பாகவே வாய்க்கப் பெற்றவர்; உள்ளொளியுடையவர்; பரந்த நோக்கமுடையவர்; அறிவு சான்றவர்; உறுதி பூண்டவர்; ஆற்றல் மிக்கவர்; அன்பு நிறைந்தவர். இவற்றோடு கல்வியிற் சிறந்தவர்; சொல்வன்மை படைத்தவர். இன்னோரன்ன இயல்புகளையுடையவரன்றோ தாய்த்திரு நாட்டுக்குத் தொண்டுபுரியத் தக்கவர்?



தாய்த்திருநாடு நாட்டுத் தொண்டு தமிழ்த்தொண்டினை அடிப்படையாகக் கொண்டதாகல் வேண்டுமென்பது கலியாணசுந்தரனார் கருத்து. இருவகைத் தொண்டுகளுக்கும் நெருங்கிய பிணைப்பு உண்டு; ஒன்றையொன்று தழுவியது. ஒன்றற்கு மற்றொன்று இன்றியமையாதது. தாய்மொழிப் பற்றின்றித் தாய்நாட்டுப் பற்று இல்லையாம். அங்ஙனமே தாய்நாட்டுப் பற்றின்றித் தாய்மொழிப் பற்றும் இல்லையாம். இருவகைப் பற்றும் இல்லாதார் மக்கட்பிறப்பில் வைத்து எண்ணத்தகாதவர். இறைவனுலகில் அவ்வாறமைந்த மக்கள் ஒருவரேனும் உளராயின், அந்நாடு நாடன்று; சுடுகாடேயாம். இவ்வுண்மையை நன்குணர்ந்தவர் கலியாணசுந்தரனார். இவர் தாய்மொழிப் பற்றில் தேசப்பற்றையும், தேசப்பற்றில் தாய்மொழிப் பற்றையும் விதைத்துச் செழிக்கச் செய்து வந்தவராவர்.

தாய்மொழி புராணவாயிற்பட்டு மீட்சியில்லாத நெறியை அடைந்திருந்தது. அதனைத் தமது அறிவுரங்கொண்டு வலிதின் வாங்கி, அதற்குத் தேசப்பற்று என்னும் உயிராற்றலைக் கலியாணசுந்தரனார் உதவினார். இப்புதிய ஆற்றலால் தமிழ்மொழி புத்துயிர் பெற்று இளமை வேகத்துடன் தமிழ்நாட்டிற் பரவத் தொடங்கிவிட்டது. உயிருள்ள, வேகமுள்ள, ஆற்றலுள்ள புதிய தமிழ் இவர் எழுதியுள்ள அழகிய நூல்களிலே மிளிர்ந்து பாய்கின்றது. என்றும் அழியா இளமைத்தெய்வம் திருநடஞ் செய்கின்ற பூங்கோயிலாக நமது தமிழ்த்திருநாடு விளங்கவேண்டுமென்ற கொள்கை இவரது உள்ளத்திலே குடிபுகுந்தது.

இப்பூங்கோயிலினுள் வீற்றிருக்கும் தெய்வம் தமிழ் மக்களது சமயத்தெய்வமாக இருக்கவேண்டும் என்பதும் கலியாணசுந்தரனார் உள்ளக்கிடக்கை. நெடுங்காலமாகப் பலவேறு சக்திகளுக்கு உட்பட்டுத் தெய்வபேதங்களும் சமய பேதங்களும் நிரம்பியிருந்த நமது நாட்டில் சமய ஒற்றுமை காணவேண்டுமென்று பெரிதும் உழைத்துவந்த பெருமக்களுள் ஒருவர் இவர். வீரியர் வீரம் விழுங்கிநின்ற வேலவனாய தமிழ்த் தெய்வத்தின் சிறப்பு இவரிடத்தே ஒரு புத்துணர்ச்சியைத் தோற்றுவித்தது. 'முருகன் அல்லது அழகு' என்ற நூல் இப்புத்துணர்ச்சியின் விளைவேயாகும். தமிழ் தெய்வத்திற் கேற்ற தமிழ். தமிழ்த்

தெய்வம் வேணவாவால் உண்டு மகிழ்ந்தது பூரிக்கும் தமிழமிர்து. அத்தெய்வம் விரும்பித் திளைத்தாடும் தமிழ்த்திருநதி. அத்தெய்வம் வெற்றிக் கோலத்துடன் பொலிந்து விளங்கும் தமிழ்ப் போர்க்களன்.

வீரம் காதலின்றிச் சிறவாது. காதலும் அழகும் கலந்தே தோற்றமளிப்பன. இரண்டிற்கும் நிலைக்களனாயுள்ளார் பெண்மணிகளே. தாய்நாட்டின் வாழ்வு அவர்கள் வாழ்வு. தாய்நாட்டின் தாழ்வு அவர்கள் தாழ்வு. மக்கட் பண்பு அவர்களாலே உளதாவது; அவர்களாலே இலதாவது. அவர்கள் கல்வியை நாம் வெகு காலமாகப் புறக்கணித்துவிட்டோம். அவர்களது மேம்பாட்டைக் கனவினும் கருதினோமில்லை. அவர்களை விலங்குகளோடொப்பக் கருதிவந்தோம். வீரமக்கள் தோன்றுவதற்கு இடனில்லாது செய்துவிட்டோம். இக்குறைபாடு கலியாணசுந்தரனாரது மனத்தை ஈர்த்து வந்தது. அவரது உயிராற்றலைக் குறைத்துத் தேய்த்து வந்தது. இனிப் பொறுத்தல் அரிதாயிற்று. அவரது உள்ளம் உடைந்து உணர்ச்சி பெருக்கெடுத்துத் தமிழுலகிற் பரந்து பாய்ந்தது. இதன் விளைவாகிய 'பெண்ணின் பெருமை' என்ற நூல் அழகு வாய்ந்தது; இன்பம் பயப்பது; நீண்ட காலமாய் வருந்திய பிணிக்கு அருமருந்தன்னது.

இந்நூல்களெல்லாம் பரந்த பெருநோக்கத்துடன் எழுதப்பட்டன. தமிழ்நாடு உய்தி பெறுதற்குரிய உபாயத்தையே தெளிவிப்பது. உலகம் தான் சென்று கொண்டிருக்கும் பாழ்நெறியினின்று விலக வேண்டும். அழிவையே எண்ணி ஆக்கத்தை யாய்க்கும் பொல்லா நெறியைத் தூர்த்துவிடவேண்டும். உலகம் உய்திபெறவேண்டும். இன்ப வெள்ளத்தில் திளைக்கவேண்டும். 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற தெய்வப்புலவர் திருநெறியை மக்கள் மேற்கொள்ள வேண்டும். இப்பொது நோக்கங்களே திரு. முதலியாரை ஊக்கிவந்தன. இவை பற்றித் தோன்றிய கருத்துக்கள் 'பொதுமை வேட்டல்' என்ற செய்யுள் நூல் வடிவாக வெளிவந்தன. உலகம் நீதிநெறியிலே நிலை பெற்றிருக்க வேண்டும் என்ற ஆராப் பெருங்காதல்.



பன்மார்க்க அடியாகிப்
    பண்புவளர் சன்மார்க்கம்
உன்மார்க்கம் ஒருமார்க்கம்
    உயர்மார்க்கம் வேறில்லை
தொன்மார்க்கம் என்னுளத்தில்
    துலங்கவைத்த மெய்ப்பொருளே
துன்மார்க்கம் சாயஇங்குத்
    துணைசெய்ய அருள்பொழியே. (பச். 32)

எத்தனை அழகாக, எத்தனை உறுதியாகப் புலப்படுகின்றது.

பெரு நோக்கங்கள் பக்குவமெய்திய மனத்தின்கண்ணேயே தோன்றுவது. வெகுகாலமாக, இளமைதொட்டு, திரு. முதலியார் தம்மைப் பக்குவப்படுத்தி வந்திருக்கின்றனர். மனமிறக்க வேண்டுங் கல்வியைக் கற்றனர். இறந்தும் இறவாது, முன்னையினும் பன்மடங்கு உயிராற்றலோடு, விரைந்து, தொழிற்பட்டு வாழும் மனத்தைப் பெறவேண்டுங் கல்வியைக் கற்றனர். இக்கல்வி கலாசாலைகளில் போதிக்கப் படுவதன்று; கழகங்களில் விளைவதன்று. இடைவிடாத மனப்பயிற்சியால் விளைந்து செழிப்பதாகும். மிக நீண்ட காலம் இப் பயிற்சியில் நிலை நின்றார்க்குப் பொருள்களின் உண்மைத்தன்மை விளங்குவதாகும். உள்ளொளி தோன்றி அறிவு, சொல், செயல் என்ற மூன்றனையும் விளக்கமுறச் செய்து அமைதியையும் இன்பத்தையும் கொடுக்கும். இவ் உள்ளொளியே வாழ்க்கை நெறியிற் செலுத்துவது மாகும். இவ் உள்ளொளியால் தோன்றி வெளிவரும் சொற்கள் உண்மையுடையனவாய், பயனுடையனவாய், கேட்போர் கற்போர் மனத்தில் ஒளி பிறங்கச் செய்வனவாய் அமையும். இத்தகைய ஒளியோடு கூடிய செஞ்சொற் புலவர் பெருமான் திரு. வி. கலியாணசுந்தரனார்.

இவர் மனத்தினின்றும் தோன்றி வெளியே பரவிச் செல்லும் இவ் உள்ளொளி அனைவரும் உய்தி பெறுவதற்கு நெறிகாட்டுக.

திரு. கலியாணசுந்தரனாரது ஆன்மா சாந்தி பெறுக.

---

# சங்கற்ப நிராகரணம்

புலவர். முருகவேள். B.O.L.

(முற்றொடர்ச்சி மலர் - 26 ; இதழ் - 9 ; பக்கம் 399)

## 5. பாடாணவாதி சங்கற்பம்

ஐக்கியவாதியின் கொள்கைகளை மறுத்த பாடாணவாதி, இனித் தன் கொள்கைகளைக் கீழ்வருமாறு எடுத்துக் கூறலுறுகின்றான்: தொன்மையிலேயே உயிர்களுக்கு இயல்பாக ஆணவமலம் என்பதொன்று உண்டு. அம்மலத்தினைப் போக்குதற் பொருட்டு மாயையானது உயிரின்பால் வந்து பொருந்தும். இறைவன் உயிர்களுக்கு அவைகள் முன்னே செய்த வினைகளுக்கு ஏற்ப, உடல்களைப் படைத்துக் கொடுப்பான். உயிர்கள் அவ்வுடல்களோடு பொருந்தித் தங்களது நல்வினை தீவினைகள் என்னும் இரண்டன் பயனையும் நுகர்ந்து வரும். இங்ஙனம் இருவினைப் பயன்களையும் நுகர்ந்து வருங்கால், உயிர்களுக்கு ஆணவமலத்தினால் மறைப்பு நிகழ்கின்றது. அதனால் முன்பு நன்றாகக் காணும் தன்மை பெற்றிருந்த கண்கள் இடைநடுவே படலமேலீட்டால் தமது பார்வையினை இழந்துவிடத் துன்புறும் மக்களைப் போல, உயிர்களும் ஆணவமல மறைப்பினால் அறிவை இழந்து துன்புறும். அங்ஙனம் அறிவு மறைப்புண்டு துன்புறுதலால், உயிர்களுக்குப் பிறவித் துன்பமானது மேலும் மேலும் பெருகாநிற்கும். இஃது உயிர்களின் கட்டுற்ற நிலை.

இனி வீடுபேற்று நிலையோ எனின், அறியாமை மிக்க மாந்தர்கள் எல்லாத் துன்பங்களும் நீங்கப் பேருறக்க நிலையில் அழுந்திக் கிடக்கும் தன்மைபோல—சுட்டிக் காண்டற்கு ஒரு காட்சியும் இன்றாய், இன்ப துன்ப நுகர்ச்சிகளும் இல்லாதொழிய, உயிர்கள் ஆணவமலத்தில் அடங்கிக் கல் (பாடாணம்) போலக் " கரணங்கள் கெட இருக்கும் " நிலையே வீடுபேறாகும் எனப் பாடாணவாதி புகன்றான். இதன்கண், வீட்டு நிலையில் உயிர்கள் கல்லினைப் போலக்



கிடக்கும் என்று அகச்சமயத்தில் பாடாணவாதி கூறும் திறனைப் போலவே, புறச்சமயத்தில் பிரபாகரன் என்பானும் கூறுவன் என்பது,

" அருஞ்செயலின் அபாவத்தே அபூர்வமெனும் அதுதோன்றித்
தருஞ்செயல்ஒன் றின்றியே தான்பலிப்ப தாகும்அது
வருஞ்செயல்ஒன் றின்றியே மண்சிலைபோல் ஆம்முத்தி
தரும்செயலும் எனவுணர்ந்து தாரணிமேல் அவன்சாற்றும் "

எனவரும் சித்தியார் பரபக்கச் செய்யுளால் உணரலாம். " ஆணவந்தான் அநாதி, அந்தம் அடையாதாகும், அடையின் அந்த ஆன்மாவும் அழியும் " என்பது பாடாணவாதியின் முடிந்த கொள்கை.

## 6. பாடாணவாதி நிராகரணம்

பாடாணவாதி தன் கொள்கைகளைக் கூறி முடித்ததும், பேதவாதி எழுந்திருந்து அவற்றை மறுக்க முற்படுகின்றான்: சொற்களைப் பலவாகப் பயனின்றிப் பாரித்துரைத்து, உவமைகளும் கூறி, முடிவில் எல்லாக் கருவிகளும் நீங்கி உயிர்கள் ஆணவ மலத்தில் அழுந்திக் கிடக்கும் கேவல நிலையினையே வீடுபேறும் என நீ துணிந்துரைத்தாய்! இவ்வாறு கூறினார் வேறுபிறர் எவருமிலர்! விளக்கானது ஒளி நல்கக் கண்கள் பொருள்களைக் கண்டு வருதல் போல, உயிர்களுக்குத் துணையாக இயைந்த கருவிகள் பொருள்களை விளக்கி யுணர்த்த, உயிர்கள் சுவையொளியூறோசை நாற்றங்களை நுகர்ந்து கொண்டு வரும் என உயிர்களின் சகல நிலை பற்றி நீ கூறியது பொருத்தமேயாகும். படலம் மறைத்ததனால் இடையே காட்சி தடைப்பட்ட கண்ணினையுடைய உயிர்களுக்குப் பின்னர் ஒரு நிலையில் மருந்திடுதல் முதலியனவற்றால் படலம் நீங்கிப் பார்வை தெளிவடையக் காண்கின்றோமாதலின், விளக்கினைப் போல உயிர்களுக்குக் காட்டாக நிற்கும் கருவிகள் இல்லாதவழி உயிர்கள் ஆணவ மலத்தில் அழுந்திக் கிடக்கின்ற கேவலநிலை பற்றியும் பொருத்தமாகவே பிழைபாடின்றிக் கூறினாய்!

ஆயின், வீடுபேற்று நிலையினையும் அத்தகையதொரு கேவலநிலை போலவே நீ கூறிவிட்டமை, பொருத்தமாகத் தோன்றுகின்றிலது! சுட்டிக் காண்டற்கு ஒரு காட்சியுமின்றித் துன்ப நுகர்ச்சியும் இன்றி எல்லாக் கருவிகளும் நீங்கிய நிலையே வீடுபேறு எனின், கருவிகள் இழந்தவர்கள் இறந்தொழிந்தவர்கள் கருவிற் கிடப்பவர்கள் மரமிவர்ந்தோர்கள் முதலிஞேரும் வீட்டுநிலை எய்தியவர்களாதல் வேண்டும்! இத்தகையதொரு வீட்டுநிலையினை எய்துதற்கு எத்தகைய ஞானசிரியனும் வேண்டுவதில்லை. மிக எளிதில் எவரும் எய்திவிடத் தகுந்த இத்தகைய நின் வீட்டுநிலை, எல்லாக்கருவிகளும் நீங்கி ஆணவமலத்தோடு கூடி ஒன்றும் அறியாமல் கிடக்கும் கேவலநிலைத் துன்பமே யன்றி வேறொன்றன்று - இப்பகுதியின்கண், உயிர்கள் வீட்டு நிலையில் கரணங்கள் கெட்டு அறிவிழந்து கல்லைப்போற் கிடக்கும் எனப் பாடாணவாதி சொல்லுதல் பொருந்தாதெனப் பேதவாதி மறுத்ததனை ஒட்டி,

" ஒடுங்கிடா காணந் தாமே;
ஒடுங்குமா றுணர்ந்தொ டுக்க
ஒடுங்கிடும் என்னில், நின்றது
ஒடுங்கிடா; காணம் எல்லாம்
ஒடுங்கிட ஒடுங்க உள்ள
உணர்வுதான் ஒழியும்; வேறாய்
ஒடுங்கிடின் அன்றி மற்ற
உண்மையை உணரொ ணாதே "

எனவரும் சிவப்பிரகாசச் செய்யுளும் மறுத்தல் காணலாம்! வீட்டு நிலையில் ஆணவமலம் "ஔடதத்தால் தடுப்புண்ட விடமும், ஒள்ளெரியின் ஒளிமுன்னர் இருளும், தேற்றின் வருபரல்சேர் நீர்மருவு கலங்கலும் போலாகி மாயாதே தன் சக்தி மாய்ந்து தேயும்" என்பது சைவ சித்தாந்தம்.

## 7. பேதவாதி சங்கற்பம்

இவ்வாறு பாடாணவாதியை மறுத்த பேதவாதி, பின்னர்த் தன் கொள்கைகளை எடுத்துக் கூறுகின்றான்:



நிலத்தின்கீழ்ப் புதையுண்டு கிடக்கும் செம்பின்கண் உண்டாகும் களிம்பானது இரத குளிகை சென்று கூடிய பொழுது நீங்க, அச்செம்பு பத்தரை மாற்றுப் பொன்னாயின தன்மைபோல - தகுதி பெற்ற உயிர்கள் இறைவனது அருளால் ஆணவம் மாயை கன்மம் எனப்பெறும் மலங்களின் தொடர்பொழிந்து அழியாததாய்க் குற்றமற்றதாய் விளங்கும் வீட்டுநிலை பெற்று, பெறுவானும் பேறுமாய்ப் பேதமுற இருக்கும் என்று மறைவல்ல நல்லோர்கள் சொல்லுகிற்பர்— இப்பகுதியின்கண் களிம்பு நீங்கிய செம்பு பொன்னாதல் போல உயிர்கள் மலம்நீங்கி வீட்டுநிலை எய்தும் எனப்பெறும் கருத்தினை, "செம்பிரத குளிகையினால் களிம்பற்றுப் பொன்னாய்ச் செம்பொனுடன்சேரும். மலம் சிதைந்தால் சீவன் நம்பனுடன்கூடும்" எனச் சிவஞானசித்தியாரும் பிறன் கூற்றாக எடுத்து மொழிதல் காணலாம்.

## 8. பேதவாதி நிராகரணம்

இங்ஙனம் மேலே தன் கொள்கைகளைக் கூறிய பேதவாதியினைச் சிவசமவாதி அடுத்தெழுந்து மறுக்கத் தொடங்குகின்றான்: 'வேதசாத்திர மிருதி புராண கலை ஞானம்' என்னும் இவைகளெல்லாம் பதிபசுபாசம் என்னும் முப்பொருட்கும் அழிவில்லை எனச் சற்காரிய வாதம் கூறுதலை இதுபோழ்தத்து மறந்துவிட்டு, ஓர் இரத குளிகையின் செயலால் செம்பின்கண் உளதாகிய களிம்பு கெட்டொழிதலை மலங்களின் கேட்டிற்கு நீ உவமையாகக் கூறியது, சான்றோர்களின் நூல்களுக்கு முரண்படுமாதலால், வீடுபேற்றில் பாசம் கெடும் என்ற நின்கொள்கை பொருந்தாது.

மேலும், இரத குளிகையானது செம்பை நிலைநிற்க ஒட்டாமல் அதனை யழித்துப் பொன்னாகச் செய்த உவமை நிலை, அதன் உவமேயமாகிய வீடுபேற்று நிலைக்கு இயைந்ததாக இல்லை. இயையுமாயின், செம்பானது அழிந்து பொன்னாக மாறுதல் போல. உயிரானது அழிந்து சிவமாக மாறுகின்றது எனல் வேண்டும். ஆதலின், உயிரானது முதல் கெடாது பெறுவானாய் இருப்பச் சிவம் பேறாகநிற்கும் என்று நீ கூறிய பேதவாதம் பழுதுபடும்.

இவையன்றியும் நின் கூற்றில் வேறொரு குற்றமும் உளது ! அஃது யாதெனில் செம்பானது தன்னைத் தூய் தாக்கிய குளிகையுமாகாமல், தன்னுடைய தன்மையும் கெட்டு இடையே பொன்னாயின தன்மைபோல — உயிரும் தன்னைத் தூய்மைசெய்த சிவத்தின் இயல்பும் பெறாமல், தன் தன்மையும் அழிந்து, வேறே ஒரு பண்டியைப் பெறுவதாதல் வேண்டும். அங்ஙன மின்மையின், நின் கூற்று குற்றமாதல் தெளிவு. வீடுபேறுவது, செம்பும் இரத குளிகையும் போலும் என்று நீ கூறிய உவமைக்குப் பொருந்துவதன்று — இதன்கண், வீட்டுநிலையில் முப்பொருள்களும் அழியாமல் இருக்கும் என்பதனை,

“ முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள் !
சுத்தஅநு போகத்தைத் துய்த்தல் அணு — மெத்தவே
இன்பம்கொ டுத்தல்இறை, இத்தைவிளை வித்தல்மலம்
அன்புடனே கண்டுகொள் அப் பா ”

எனவரும் ‘ உண்மை விளக்க’ச் செய்யுளால் எவரும் இனிதுணரலாம்.

(தொடரும்)

— —

# அஞ்சுதல் அஞ்சாமை

[ திருவண்ணாமலை, அ. தா. ப. திருஞானசம்பந்தன் ]

## தோற்றுவாய்

உலகில் வாழ்கின்ற நாம் அஞ்சி வாழவேண்டுமா ? ஆம் ! அஞ்சாது வாழவேண்டுமா ? ஆம் ! இது என்ன வியப்பு ! இரண்டும், ஒன்றோடொன்று புறம்பானதாய் நிற்கும் கேள்விகளுக்கு ஒத்த விடை வருகிறதே என்ற ஐயம் எல்லார் உள்ளத்திலும் தோன்றும். எவ்வெப் பொருளுக்கு அஞ்சி வாழவேண்டுமோ அங்ஙனம் வாழ்வதும், எவ்வெவற்றிற்கு அஞ்சாது வாழவேண்டுமோ அவ்வவற்றிற்கு அஞ்சாது வாழ்தலுமே அறிவுடைமை. மேற்



கண்ட உண்மையை ஆய்ந்து, தெளிவதே இக் கட்டுரையின் நோக்கம்.

அஞ்சி வாழ்தல் என்பது உலகத்திலே இயற்கையாய் இருந்துவருகிறது. எலி பூனைக்கு அஞ்சுகிறதல்லவா ? பாம்பு படையை நடுங்கவைக்கும் சக்தி பெற்றிருப்பினும் கீரிக்கு அஞ்சுகிறதல்லவா ? ஆடு ஓநாய்க்கு அஞ்சுகிறதல்லவா ? சிற்றரசுகள் வல்லரைக் காண அஞ்சுகின்றன அல்லவா ? அதைப் போல நல்லோனும், தீயோனைக் காணவும், பேசிப்பழகவும், அவன் வார்த்தை வழி நடக்கவும் அஞ்சுகிறான். இன்றைய தமிழகத்தில் தோன்றும், குழந்தைகளுக்கு, இளமைக் காலந்தொட்டே அஞ்சும் நிலையை - பயந்து வாழ்வும் வாழ்வை - ஊட்டி வளர்த்துவிடுகின்றனர், தாய்மார்கள். குழந்தை உணவு உண்ண மறுத்தால், தாய் அவனுக்கு பயத்தைக் காட்டி, உணவை ஊட்டி வளர்த்துவிடுகின்றாள். அச்சத்தின் அரவணைப்பிலே வளரத் தலைப்படும் குழந்தையின் எதிர்கால நிலையைச் சொல்லத் தேவையில்லை ! குழந்தை உள்ளங்கள் பயத்தால் பிணிக்கப்பெற்று, வளருங் காலத்து வன்மையற்றுப் போகின்றது. இங்ஙனம் வளர்ந்து வாழ்வது அஞ்சுதலின் பாற்படாது! அது கோழை வாழ்விற்கே அழைத்துச் செல்லும் என்பது திண்ணம்.

### அஞ்சுதல்

அஞ்சுதல் என்ற சொல்லிற்குப் பயப்படுதல் என்பது பொருள். உலகில் எதற்கு அஞ்சுதல் வேண்டும். தீயவை செய்ய அஞ்சுதல் வேண்டும். ஏன் ? தீயவை தீயொத்தனவாகும் சிறு பொறியாகத் தோன்றும் தீ, முடிவில் ஊரையே விழுங்கிவிடுவதுபோல, சிறிது தீயவை எண்ணினும், செய்திடினும் அவர்களையே அது வாட்டி வலியுறுத்தும். “ முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் ” என்பது ஔவைவாக்கன்றோ ? நாம் நல்லன ஒருவர்க்குச் செய்யுங்காலத்து, அவரும் நலம்பெற்று, நாமும் நலன் எய்தல் தெளிவு. அன்றி

தீயன ஒருவர்க்குச் செய்யுங்காலத்து, அவரும் தீதெய்தி நம்மையும் உடனே அது தீ நெறிக்குட்படுத்தி மாய்க்கும் என்பது உண்மை.

*தீயவைதீய பயத்தலால் தீயவை*
*தீயினும் அஞ் சப்படும்.* (குறள்—தீவினை - 2)

பொய்பேசுதல், களவாடல், பிறனமனை நயத்தல், உயிர்க்கு உறுகண் செய்தல் போன்ற பாதகச் செயல்களினின்றும், ஒதுங்கிவாழ, நம்மை நாம் பக்குவப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இங்ஙனம் பக்குவப்படுத்திக் கொள்ளப் பெருந்துணை செய்வது சமய வாழ்க்கையே என்பது ஈண்டு நினைவிற் கொள்ளற்பாலது. நல்லன தீயன எண்ணுங் காலத்திலேயே, நம் நெஞ்சம் நடுநிலை பிறழாது நன்றிது, தீதிது என்ற உண்மையை விளம்பியே நிற்கின்றது. எனினும் அதன்வழி நடவாது, வேற்றுவழி நடக்கின்றபொழுதுதான், செல்ல வேண்டிய பாதையும் தடுமாறி, காலில் கற்களும், முட்களும் நட்புகொண்டு ஊறு நிகழ்த்துகின்றன.

*தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்*
*தன்னெஞ்சே தன்னைச் சுடும்.* (குறள்—வாய்மை - 3)

## அஞ்சாமை

தீயவை எண்ண, செய்ய, அஞ்சுதல் வேண்டும் என்பதை முன்னர் அறிந்தோம். இப்பொழுது அஞ்சாமையைப் பற்றி அறிய வேண்டும். அஞ்சவேண்டியவைகளுக்கு அஞ்சியும் அஞ்சவேண்டாதனவற்றிற்கு அஞ்சாமலும் வாழ்ந்தவர்களே நம் பெரிய புராண அடியார்கள் என்க. திருநாவுக்கரசர் பெருமானை நோக்குங்கள்! நாவரசர் பெருமான் சமண சமயம் நீங்கி, சைவமாம் சமயம் சார்ந்தார் என்பதை அறிந்த சமண மன்னன் தன்னாட்களை விட்டு அழைத்துவரும்படிச் சொல்லியபொழுது, நாவரசர் அவர்



களுக்கு என்ன பதில் கூறினார்? அதைச் சேக்கிழாரடிகள் திருவாக்கினின்றும் உணர்க.

**"நாமார்க்குங் குடியல்லோ மென்றெடுத்து நான்மறையின்"**
*கோமானை நதியினுடன் குளிர்மதிவாழ் சடையானைத்*
*தேமாலைச் செந்தமிழின் செழுந்திருத் தாண்டகம் பாடி*
*யாமாறு நீரழைக்கு மடைவில மென்றருள் செய்தார்.*

நாமார்க்கும் குடியல்லோம் என்று அருளிய பின்னர் உயிரைவிட உலகில் உயரிய பொருள் இல்லை. அதனால் அதை உண்ணும் கூற்றுவன்வரினும் அதற்கும்தான் அஞ்சேன் என அறைந்து சென்றார் தம் மறையில் அடிகளார். நாவரசர் தம் பாடலில், இதனால் நாமறிவது என்ன எனின், அடிகள் உண்மை ஈதென ஆய்ந்து உளத்தில் முடிவுகட்டிக் கொண்டபிறகு, உள்ளம் அவருக்கு உரம் பெற்றது. உரம் பெற்ற உள்ளத்தில் தோன்றும் வார்த்தைகள் திண்மை உடையனவாக அன்றோ இருக்கும்? திருவாதவூரடிகளும் நீத்தல் விண்ணப்பத்தில் இறைவனிடம் முறையிடும் செய்தியை இவ்விடத்தில் காண்டல் நன்று. அஞ்சி, அஞ்சி, வாழ்கின்ற தன்னை அஞ்சேல் எனக் கூறி மனத்திண்மை அளிப்பாரின்றி, எய்த்தலைந்தேன் என்கிறார்.

*"என்னை அப்பா அஞ்சல் என்பவரின்றி நின்றெய்த்தலைந்தேன்"*

—திருவாசகம்.

## வள்ளுவர் புகட்டும் அஞ்சாமை

திருவள்ளுவர் ஒரு உலகப் புலவர். அவர் கருத்து என்னில் இன்று யாரும் தடையின்றிக் கொள்வர். அவர் அஞ்சுதலைப் பற்றியும், அஞ்சாமை பற்றியும் தான் இயற்றிய குறட்பாக்களிலே கூறிச் செல்கிறார். ஈண்டு அவர் புகட்டும் அஞ்சாமை எது? என்பதைக் காண்போம். வள்ளுவர் அரசனின் இலக்கணம் பற்றிப் பேசவரும்போதெல்லாம்

முதலில் அவனுக்கு அஞ்சாமையே அணிகலனாக விளங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்.

அஞ்சாமை யீகையறி வூக்கமிந் நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு. —(குறள்—இறைமாட்சி - 2)

பயப்படாதிருத்தலும், கொடையும், அறிவும், ஊக்கமும் ஆகிய இந்நான்கும் வேந்தர்க்கு இயல்பாய் அமைந்தவை. இவையின்றி வாழ்வோன் அரசனாதற்கோ, அன்றி இருத்தற்கோ உரியனல்லன். அச்சம் உடைய மன்னன் எளிதில் அடிமைப்படுவது திண்ணம். நாட்டு மக்களை நன்முறையில் ஆளுவதற்கு முதற்கண் மன்னனுக்கு அச்சம் தொலையவேண்டும். அஞ்சவேண்டிய காரியங்களுக்கு அஞ்சுபவனும், அறியவேண்டிய நுண்பொருள்களை அறியாதவனும், எல்லாரோடும் ஒத்த நடையில்லாதவனும், நல்லாருக்குக் கொடையளிக்காதவனுமான அரசன் தன் பகைவர்களுக்கு எளியனாவன் என்பது பெருநாவலரின் கருத்து.

அஞ்சுமறியா னமைவிலனீகலான்
றஞ்ச மெளியான் பகைக்கு —(குறள்—பகைமாட்சி - 3)

மீண்டும் அரசனுக்குரியது அஞ்சாமையே என்பதை இடனறிதல் என்ற அதிகாரத்தில் வற்புறுத்துகிறார் தேவர். பகைவரை வெல்லுமிடத்து அதற்குவேண்டிய திறங்களையெல்லாம் குறையாமல் எண்ணி அத்திறங்களைப் பொருந்தச் செய்வாரானால், அச் செயலுக்குத் தன் திண்மையே துணையாதல் அல்லாமல் வேறு துணை வேண்டுவதில்லை.

அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா எஞ்சாமை
யெண்ணியிடத்தாற் செயின்.

—(குறள் – இடனறிதல் - 7)

அஞ்சாது வாழ்கின்ற வாழ்வுதான் அரசனுக்கு வேண்டும் என்று வற்புறுத்துகிறார் வள்ளுவர். இவண் அரசு



என்பதைக் குடும்பம் எனவும், அரசன் என்பதை குடும்பத் தலைவன் எனவுங் கொள்ளினும் செயல் மாறுபடாது; கருத்தும் மாறுபடாது.

## வள்ளுவர் இகழும் அச்சம்

கீழ்மக்களாயினோர் ஆசாரமின்றியே வாழ்வர். இவண் ஆசாரம் என்பது பெரியாரைத் துணை கொள்ளாமலும், அவர் சொற்படி நடவாமலும், அல்லாது அவர் வழி நிற்றல் என்பதாம். ஒழுக்கம் இன்றி வாழும் கீழ்மக்கள், எப்பொழுது ஒழுக்கத்துடன் வாழத்தலைப்படுவர் என்பதை வள்ளுவர் எடுத்துக் காட்டுகிறார். கயவராகிய கீழோர் நல்லொழுக்குடன் வாழ்தலைக் கண்டால், அதற்குக் காரணம் அவர்களுக்கு இயற்கையிலேயே அவ்வொழுக்கம் இல்லாதிருப்பினும் தாங்கள் விரும்பும் பொருள் பெறுதல் வேண்டும் என்ற நோக்கம் பற்றியும் ஆசாரம் தோன்றும். கீழ்மக்களுக்கு ஆசாரம் பெரும்பாலும், அச்சத்தாலும், சிறுபான்மை பொருள் பெறுதலினாலும் உண்டாவதல்லால், இயற்கையில் உண்டாகாது என்பது தெளிக.

அச்சமே கீழ்களதாசார மெச்சம்
அவாவுண்டே லுண்டாஞ் சிறிது.

—(குறள்—கயமை - 5)

## மாணிக்கவாசகரின் அஞ்சுதல் அஞ்சாமை

சமய உலகத்தில் வாழ்வோரின் உள்ளத்தைப் பிணித்தவர் மாணிக்கவாசகர் பெருமான். அவர் பாடல்களைப் படித்த சமயப் பெரியார்களெல்லாம் தித்திக்கும் தேனமுது என்பர். மாணிக்கம் போன்ற பெறலரும் பாடல்களை அளித்தமையால் அன்றோ திருவாதவூரடிகள் மாணிக்கவாசகர் என்ற பெயர் பெற்றார். அப்பெருமானும் அச்சப்பத்து ஒன்று பாடியுள்ளார் எனின் அதை நாம் சிந்திக்க

வேண்டாமா? அவர் எவ்வெவ்வற்றிற் கெல்லாம் அஞ்சுகிறார் என்பதைக் காண்மின்!

புற்றிலுள்ள வாளை யொத்த பாம்பிற்கு நான் அஞ்சேன்; பொய்யர்கள் புகலும் மெய்க்கு அஞ்சேன்; வினைக்கடல் புரண்டு வந்து என்னை மாய்க்கினும் அஞ்சேன்; பல உடலை வருத்தி ஊனிற் றவழ்ந்த வேலுக்கும் அஞ்சேன்; பவழவாய் கொண்ட வளைகளைப் பூண்ட பெண்களுக்கும் அஞ்சேன்; எரிகின்ற நெருப்பிற்கும் அஞ்சேன்; வரை புரண்டிட்டு மேல்வீழினும் அஞ்சேன். மதம் பிடித்த யானைக்கும் அஞ்சேன்; நெருப்பை நிகர்த்த கண்கள் கொண்ட புலிக்கும் அஞ்சேன்; வாளி என்ற பறவைக்கும், கூற்றுவன் சீற்றத்திற்கும் அஞ்சேன் என்றெல்லாம் பேசிச் செல்கின்றார் பொய்யடிமையில்லாத புலவர். எனினும் அவருக்கும் அச்சம் பிறக்கிறது. எப்பொழுது பிறக்கிறது? ஏன் பிறக்கிறது? எதற்காகப் பிறக்கிறது என்பதையுங் காண வேண்டுமல்லவா?

கங்கையைச் சடையில் கொண்ட முக்கண்ணனை சிவபெருமான் பாதம் அடைந்து, மற்றொரு தெய்வந்தன்னை உண்டென நினைந்து, எம்பெருமானிடம் பற்றில்லாதவரைக் காண அம்ம! நாம் அஞ்சுகிறோம் என்கிறார் ஆளுடைய அடிகள்.

"என்பொலா மணியை ஏத்தி இனிதருள் பருகமாட்டா
அன்பிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே!"

"திணிநிலம் பிளந்துங் காணாச் சேவடிபரவி வெண்ணீ(று)
அணிகிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே!"

"மூக நகைக் கொன்றைமாலை முன்னவன் பாதமேத்தி
அகநெகாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே!"

"செறிதரு கழல்களேத்திச் சிறந்தினி திருக்கமாட்டா
அறிவிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே!"



இறைவனை சிவபெருமானிடம் பற்றில்லாதவரையும் அன்பில்லாதவர்களையும், திருவெண்ணீறு அணிகிலாதவர்களையும், அப்பன் கழல்களைப் போற்றிச் சிறந்தினிதிருக்கமாட்டாத அறிவிலாதவர்களையும் காணக் கூசுகிறார்; காண அஞ்சுகிறார் வாதவூரடிகள். ஒழுக்கத்தின் வடிவிலே நிற்கின்றான் இறைவன் என்ற கொள்கை பற்றி, அவனை வழுத்தி, அவனருளாலே அவனைச் சிறப்பிக்கின்ற பொழுது ஒருவர் எண்ணியவெல்லாம் நல்லன பெறுதல் இயலும் என்பதைத் தெள்ளிதின் காட்டியுள்ளார் அடிகள். உலகத்தின் நிலைகடந்து, இறைவனின் தொடர்பில் தோய்ந்த அடிகளார்க்கு, அவனைப் பற்றிய அவனைப் போற்றுபவர்களைப் பற்றிய நல்லெண்ணமும், அவனைத் தூற்றி வாழ்வோரைப் பற்றிய பாழ்த்த எண்ணமுமே தலைசிறந்து விளங்கியன என்பது அறிய இயலுகிறது.

## முடிவு

அஞ்சுகிற இடத்தில் தான் அறிவு ஆட்சி செலுத்தும். அறம் ஓங்கும்! மறம் நீங்கும்! பழிபாவங்கட்கு அஞ்சுங் காலத்தே, அன்பு உள்ளத்தில் ஊற்றெடுக்கிறது. பழிக்கு ஆளாகக்கூடாது என்று பயந்து அரசனும் நீதியைச் சரிவரச் செலுத்துகின்றான். அல்லல்பட்டுத் தன்னாட்டு மக்கள் அலறி அழுதால் தன்னாடு காடாகும் என்பதை உணரும் உணர்வு தோன்றி, நல்லாட்சியில் ஈடுபடுவான் மன்னன். அவன் நாடும் இன்ப புரியாய் இருக்கும். அதைப் போலவே உலக மக்கள், நோயிற் பிடிப்புண்டு வாழ்வோரைக் கண்டு அஞ்சி, நாமும் அறவழி நில்லாவிடில் மறுபிறவியில் நோயிற் பிடிப்புண்டு அல்லலுறுவோம் என்கின்ற எண்ணம் எழுகிறது. அஞ்சி வாழ்பவன் வாழ்வு தவவாழ்வு எனலாம். அவனால் எவர்க்கும், எவைக்கும் தீங்கில்லை. இதுவரை கூறியுள்ள அஞ்சுதல் என்பது பழி, பாவங்கட்கு அஞ்சுதல் எனக் கொள்க. அஞ்சத்தக்கவைகளுக்கு அஞ்சாதிருப்பது அறிவில்லாமையாகும். அஞ்சத்தக்கவைகளுக்கு

18689.6.

அஞ்சுதல் அறிவுடையோரது செய்கை என்ற வள்ளுவமுது மகனின் வாக்கை உன்னி ஓர்க ! அஞ்சி வாழ்வு நடத்திப் பெரும்பயன் எய்தியவர்களே அடியார்களும், நாயன்மார் களும், ஆழ்வாராதிகளும் என்பது உணரத் தக்கது.

அஞ்சுவதஞ் சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்சலறிவார் தொழில். —(குறள் - அறிவுடைமை - 8)

---

# இனி அரிதே போலும் !

[புலவர் - முருகவேள் பி. ஓ. எல்.]

1. அருமைமிகு கலைக்குரிசில் ! ஆன்றமுது பெரும்புலவ !
அறிஞ ரேறே !
பெருமைமிகத் தமிழகந்தான் பெறும்பெரும்பே ராசிரிய!
பெரிதும் நன்றே
இருமொழிகள் தேர்ந்தசைவ சித்தாந்த வித்தகராம்
இனிய சான்றோய் !
மருவருஞ்சீர்ப் பண்டிதமாமணி! நீயும்மறைந்தெமைஎன்
வருந்த வைத்தாய் ?

2. அன்புமிகு பெருந்தகையோய் ! அரியபெரும் புலமை
ஆன்ற சான்றோய் ! [யினோய் !
பண்பெருஞ்சீர் மணிமொழியார் வாசகத்தின் பொருள்
வல்ல நல்லோய் ! [விரிக்க
நன்றுநினை தரும்பிரிவால் தமிழ்நாடே மிகஇருண்டு
நலமிழந்த
தென்புகல்கேம் ? என்புரிகேம் ? ஏதொன்றும் அறிய
இனைகின் றேமால் ! [கிலேம் !

3 பூங்குன்றம் எனும்நாட்டிற் புகழோங்கக் கணியன்எனும்
புலவோன் முன்னாள்
" யாதுமூரே யாவருங் கேளிர் " எனும்
இனிய கொள்கை



தாங்கிமிக வாழ்ந்திருந்தான்! தமிழ்க்கணியாம் கதிரேசச்
சான்றோய் ! இந்நாள்
ஓங்குபெரும் புலமைநினால், உவந்தவனை நினைந்துவந்
ஒளித்தாய் என்னே ? [தோம் !

4. மாட்சிமிகு பெரும்புலவ ! மகிபாலன் பட்டியின்மா
தவமாம் மாண்ப !
சேட்சிமையும் புகழ்பொறித்த திறலுடையோய் ! கதி
செல்வ ! உண்மைக் [ரேசச்
காட்சியினால்மணிமொழிக்குக்கதிர்மணிநல்விளக்கவுரை
முற்றும் கண்டு
நீட்சிமிகும் எம்ஆவல் நிறைவுசெய்வாய் என இருந்
நீத்தல் நன்றோ ? [தேம்

5. செழிக்குமுயர்செந்தமிழ்தேர்சிவநெறிநன்மக்களெலாம்
சிறக்கப் போற்றி
விழிக்குநிகர் எனப்பரவும் வியன்திருவா சகமறைக்கு
விளக்கம் நல்கி,
மொழிக்குமொழிசுவைபெருக, முயன்றரிதுமதிநுட்பம்
முழுதும் காட்டி,
வழிக்குவழி நிலவுமுறை வழங்கியும்,என் அதனைமுற்றும்
வரைந்தி லையால் ?

6. செய்யதமிழ் உள்ளளவும் திருவா சகமறைதான்
சிறந்தி லங்கும் !
மெய்யேயஃ துள்ளளவும் வியன்கதிரே சர்பெயரும்
விளங்கு கிற்கும் !
பொய்யில்லை உண்மைஎனப் புகலுகிற்கும் பெருநிலையில்
புகழ்மை பூத்தோய் !
ஐய!நினைச் சிறந்தஉரை யாசிரியர் வரிசையினில்
அறிஞர் கொள்வர் !

7. அரியதிரு வாசகத்தின் அழகியநற் கவிதைகளை
ஆர்வம் ஓங்கப்
பெரிதுவந்து வரைந்துகொண்ட பெருமான்தான்,
பெற்றேன் ? நல்ல [" மூலமட்டும்

விரிவுரையும் வேண்டும்"என விரும்பிநின்று, நின்னுரை
மேன்மை தேர்ந்து [யின்
"சரி!இவன்பால் *நூல்கொளலே தகுதி"என்றே நினைத்
சாரக் கொண்டான் ? [தன்பால்

8. சேக்கிழார் கம்பரோடு திருத்தக்க தேவர்முதல்
சிறந்துயர்ந்த
தேக்குபெரும் புலமைநலச் செல்வர்கடம் கவிதைஇன்
திறம்தெரிந்து, [பைத்
நோக்குமிக ஆய்ந்தாய்ந்து, நுணுகிமிக நயம்பொலிய
நுவலுகிற்பாய் !
பாக்கியமஃ திழந்தெளியோம் பண்டிதமா மணி!இன்று
பதைக்கின் றேமால் !

9. ஞானத்தின் திருவுருவம், நனிஅன்பின் திருவுருவம்
முதலாம் நல்ல
தேனத்தின் சுவையிலிற்றும் சிறந்தபல கட்டுரைகள்
தெளிய ஆய்ந்து
வானத்தின் மிசை இல்லாவகைஇன்பம்வளர்த்தெமக்கு
வரைந்தளித்தாய் !
ஏனித் தகைபோய்நீ ! இலக்கியநல் இன்பொரீஇ
இறைதாள் சேர்ந்தாய் !

10. மண்ணியல்நற் சிறுதேரும், வளம்நிறைசா ணக்கியமும்
மாண்பார் வெள்ளி
எண்ணுமுயர் நீதிகளும், இனிதுவட மொழிநின்றும்
எழிலின் மிக்க
தண்ணியசெந் தமிழ்நடையில் தகுதியுற மொழிபெயர்த்
தந்த எங்கள் [துத்
புண்ணியனே ! நின்போலும் புலமையினோர் தோன்ற
அரிதே போலும் ! [லினி

* நூல்கொளல் - பாடம்கேட்டல்.

## பிரிவாற்றுமை

செழுங்கலை விநோதர் " மகாமகோபாத்தியாய "
பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்.

தமிழ்த்தாயே ! இது என்ன தீவினை !

17—9—53ல் ஒரு தமிழ் மகனை இழந்தாய்! 24-10-53ல் மற்றொரு தமிழ்ப் பேராசிரியனை இழந்தாய் !

ஒரு இழப்பையே ஈடு செய்யமுடியாது ஏங்கிக்கொண் டிருக்கும் எங்கட்கு மற்றொரு ஈடு செய்ய முடியா இழப்பு நேர்ந்ததே !

செழுங்கலை விநோதராய்த் திகழ்ந்த பண்டிதமணி அவர்கள் தமிழ்மொழியிலும் வடமொழியிலும் சிறந்த புலமை வாய்க்கப்பெற்று, தம்பேச்சாலும் எழுத்தாலும் ஆசிரியத்தன்மையாலும் தமிழ்மொழிக்கும் தமிழர்க்கும் செய்த அரும்பணிகள் மிகப்பல. அவையிற்றின் பயனாகத் தமிழர்களுள்ளே முதன்முதலாக "மகாமகோபாத்தியாய" என்னுஞ் சிறப்புப் பெற்றுத் தமிழரும் எவ்வகையானும் மேம்பாடுடையவர்களே என்பதை நிறுத்திய பெருமை அவர்கட்குரியது.

தமிழ் இலக்கியங்களிலுள்ள சைவநூல்களிலுள்ள நுண்பொருள்களைப் பாலிலிருந்து வெண்ணெய் எடுத்துக் கொடுப்பது போல் சுவைபட அவர்தம் பேச்சிலும் எழுத்திலும் திறம்படக் குறிப்பதைக் காணலாம்.

திருவாசகத்துத், திருச்சதகம்முதலிய பகுதிகட்கு எழுதியுள்ள உரையில் அமைந்து கிடக்கும் இலக்கிய நுட்பங்களை, நயங்களை, இலக்கண அமைதிகளை நோக்கும்போது அவரைப் பேராசிரியர் என்பமோ, சேனாவரையர் என்பமோ, பரிமேலழகர் என்பமோ ? சைவசித்தாந்த நுண் கருத்துக்களைக் கருதும்போது சிவஞான முனிவர் என்பமோ?

" நோக்கிற்கு நக்கீரதேவர், நயத்துக்குச் சுந்தரனார் " என்றார் முன்னே. இற்றைநாள் அவ்விரண்டிற்கும் பண்டிதமணி ஒருவராயே திகழ்ந்தாரே !

தமிழ் அன்னையே! இவர்க்கு ஈடாக யாரைக் கொடுக்கப் போகின்றாய் ? தமிழர்களாகிய சைவர்களாகிய யாங்கள் இனி என்ன செய்யவல்லேம் !

பூ. சமரபுரி

* * *

வைதிக சைவ சிரோமணி யாழ்ப்பாணத்துப் புலோலி சு. சிவபாத சுந்தரம் பிள்ளையவர்கள் (பி. ஏ.) (14-8-53) மரணம் அடைந்தார்கள்

இச்சைவப் பெரியாரைச் சைவ உலகம் நன்றாக அறியும். இவர் கடந்த 50 ஆண்டுகளாகப் பல நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டும் சைவப் பிரசங்கங்கள் செய்தும், மாணவர்களுக்குச் சைவ சமயத்தைப் போதித்தும் பெருந்தொண்டுகள் புரிந்து சைவத்தை எங்கும் விளங்கச் செய்தவர். ஆறுமுக நாவலரின் அடிச்சுவட்டைப் பின்பற்றியவர். மறைகள் நிந்தனை சைவ நிந்தனை பொறாமனமுடையவர். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பாண்டித்தியமுடையவர். ஆகமங்களைக் கற்றறிந்து அவற்றின் படி நடப்பவர். காலையும் மாலையும் கோயிலுக்குப் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்த பின்னரே போசனஞ் செய்பவர். திருக்கேதீச்சரத்தலத் திருப்பணியில் ஈடுபட்டு அதற்குப் பெரும்பொருள் உபகரித்தவர். தாம் எழுதி வெளியிட்ட நூல்களின் உரிமையை யாழ்ப்பாணத்துச் சைவ பரிபாலன சபை கொழும்பு விவேகாநந்த சபை, சிதம்பரம் அண்ணாமலைச் சர்வ கலாசாலை முதலிய நிலையங்களுக்கு அளித்த பேருபகாரி. சைவ சித்தாந்த சாத்திர உண்மைகளை ஆங்கிலத்தில் வெளியிட்ட பேரறிஞர்களாகிய நல்லசாமிப் பிள்ளை சபாரத்தின முதலியார் ஆகிய இருவருக்குப் பின் இவர் அத்துறையில் துலங்கினார். Saiva School of Hinduism என்னும் நூலை Dr. J. S. Mackenzie என்னும் பெரும்பண்டிதரின் முகவுரையோடு 1934-ம் ஆண்டில் இங்கிலாந்தில் வெளியிட்டனர். 1948-ல் தருமபுர ஆதீனத்தில் சில நாள் தங்கி நல்லசாமிப் பிள்ளையின் சிவஞான சித்தியாரின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் பார்வையிட்டுப் புதுப்பித்து அச்சிடச் செய்தனர். Psychology என்னும் மனோதத்துவ சாத்திரத்தைத் தமிழில் எழுதி வெளியிட்டவர். அளவை நூலெனப்பெயரிய தருக்க நூலை அண்ணாமலைச் சர்வகலாசாலையார் மூலம் வெளியிட்டு அதனை Intermediate course பாடபுத்தகமாக நியமிக்கச் செய்துள்ளார்.

இவர் சைவ குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருடைய தந்தையாரின் இரண்டு தம்பிகளும் ஓர் சகோதரியும் பெரும் புலவர்களாகத் தமிழிலும் வடமொழியிலும் இருந்தனரென்பர். இவர் திரிசிர புரத்தில் படித்து பி. ஏ. பட்டம் பெற்றவர். படிப்பு முடிந்ததும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி அங்கேயுள்ள Victoria College-ல் பல ஆண்டுகள் தலைமைப் பதவி வகித்தார் (Principal) அதை விட்டு விலகிய பிறகு Parameswara College-ல் சிலகாலம் ஊதியங் கருதாது தலைமைப் பேராசிரியராக இருந்தார். அதன் பிறகு கந்தவனம் என்னும் கிராமத்திற்குச் சென்று தனியாக ஆசிரமம் வைத்துக்கொண்டு வசிக்கலாயினர். பல மாணவர்களுக்குச் சமய நூல்களைப் போதிப்பதிற் காலங்கழித்தார். இவருடைய மாணவர்கள் ஆயிரக்கணக்காக இலங்கையிலும் மலேயாவிலும் உளர். இவரை இலங்கைக் காந்தி என்று சிலர் கூறுவர். இவரை இல்லறத்துறவி யென்றும் சில மாணவர் சொல்வர். இவர் இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன் Glories of saivam என்னும் ஆங்கில நூலை அச்சிடக் கொடுத்திருப்பதாகக் கூறுப. இத்தகைய சைவப் பெரியார் கடந்த ஆகஸ்டு மீ 142 வெள்ளிக்கிழமை தமது பெயருக்கேற்பச் சிவபதமடைந்தார். வயது 76. அவருடைய சைவப் பற்றை யாம் அனுசரிப்பதே யாம் அவருக்குச் செய்யும் கடமையாகும்.—சே. வெ. ஜம்புலிங்கம்



* * *

## செய்தித் திரட்டு

16—10—53 **சைவசித்தாந்தக் கழகம், விருதுநகர்.** ஸ்ரீ சொக்கநாத சுவாமி கோவிலின் முத்தமிழ் புலவர் திரு. ச. கண்ணன் அடிகள் அவர்கள் 'சுந்தரரும் சுந்தரத் தமிழும்' என்பதுபற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

17—10—53 விஜயதசமி விழாவில் மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம், இளவரசு, தவத்திரு சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமையில் நடந்தது. சுவாமிகள் 'மரணத்திற்குப் பின் மனிதர் நிலை' என்னும் பொருள் பற்றிப் பேசி இடையிடையே சித்தாந்தக் கருத்துக்களை விளக்கிக் கூறினார்கள். திரு. ச. கண்ணன் அடிகள் 'வாதவூரர் வழங்கிய வாசகத்தேன்' என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். பின்பு சுவாமிகள் திரு. கண்ணன் அடிகளுக்குப் பொன்

ளுடை போர்த்தி ஆசி கூறினார்கள். மூன்று நாளும் ஆசிரியர் : திரு. ப. பொன்னம்பலம் நன்றி கூறினார்.

11—10—53 விழாவில் தமிழ்நாடு ஆசிரியரும் மதுரை தியாகராஜ கல்லூரியின் நிர்வாகியுமான திரு. டி மாணிக்கவாசகம் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். திருவாவடுதுறை ஆதீன வித்வான் திரு. வீரசுப்பிரமணியம் அவர்கள் தமிழும் சைவமும் என்னும் பொருள்பற்றி விரிவுரை வழங்கினார்கள்.

அக்டோபர் 29, 30 : தென் திருவிதாங்கூர் திருநெறித் தொண்டர் குழாம் தனது வெள்ளிவிழாவை, மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீன இளவரசர் திருவருள் தவயோக சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகளவர்கள் தலைமையில் நாகர் கோவில் நடத்தும் என்னும் செய்தி கிடைத்துள்ளது. திருவாளர்கள் சி. வள்ளிநாயகம் பிள்ளையவர்கள், பி .ஏ., பி. எல்., பி. ஏ. நடேசபிள்ளையவர்கள், வீரசிவசுப்பிரமணியம் அவர்கள், சுந்தரம் செட்டியாரவர்கள், எஸ். தங்கநாடாரவர்கள், பாலகவி வ. வே. ராமநாதன் செட்டியாரவர்கள், துறைசையாதீன வித்துவான் நாவலரவர்கள், திருமதிகள் சி. சி. எம். ஈஸ்வர வடிவம்மாள், ஆ. சிவகாம சுந்தரி அம்மையார், திரு. சுப்பைய ஓதுவார் மூர்த்திகள் என்னும் அறிஞர்கள் இவ்விழாவிற் கலந்து கொள்வார்கள் என்று அழைப்புத்தாள் வாயிலாகத் தெரிய வருகிறது.

அன்றியும், ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள், 28—10—53 ல் திருநெல்வேலி ஜில்லா வடக்கன் குளத்தில் புதிய இந்துக் கோவிலுக்குக் கல்நாட்டியருளுவார்கள் என்றம், திருவாளர்கள் எம். அழகர் சாமியவர்கள், சொ. ச. சிவமணி நாடாரவர்கள், ஏ. ஆர். ஏ. எஸ். ஆறுமுகசாமி நாடாரவர்கள், வீரசிவசுப்பிரமணியமவர்கள், ஏ. ஆர். ஏ. எஸ். துரைசாமி நாடாரவர்கள், பி. ஏ. நடேச பிள்ளையவர்கள், சங்கரநாராயணன் செட்டியாரவர்கள், வித்துவான் கே. சி. தாணு அவர்கள், டி. சுந்தரம் செட்டியாரவர்கள், திருமதிகள் அ. சிவகாம சுந்தரி அம்மையார், சி. இ. என். ஈஸ்வர வடிவம்மாள். துறைசை மகாவித்வான் நாவலரவர்கள் சுப்பையா ஓதுவாமூர்த்திகள், அப்பாவு பாகவதர் குழு



வினர் ஆகிய இவர்கள், ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் தலைமையில் இவ்விழாவில் கலந்து கொள்வார்கள் என்றும் அழைப்பிதழ் தெரிவிக்கின்றது.

21—10—53ல் ஸ்ரீ சங்கமேசுவர சுவாமி ஆலயத்தில் பவானி திருமுறைக் கழகத் தேவார பாடசாலைக் கட்டிடங்கள் கோபிசெட்டி பாளையம் டெப்டி கலெக்டர் திரு எஸ். தருமலிங்கம் பிள்ளை பி. ஏ. அவர்கள் திறந்து வைப்பார்களென்றும், திரு. நா. கிரிதாரிப்ரசாத் பி. ஏ., பி. எல். அவர்கள் திருவாசகத்தேன் என்பது பற்றியும், திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் மீனாக்ஷியம்மையார் திருமணம் என்பது பற்றியும் பிரசங்கிப்பார்களென்றும், அறிவிக்கும் அழைப்புத்தாள் கிடைத்துள்ளது ஷை கட்டிடம், கள்ளிப்பட்டி வள்ளல், திரு. சி. கே. குமாரசுவாமி கவுண்டரவர்கள் தம் செலவிலேயே அமைத்துத் தந்ததாகும் என்றும் தெரியவருகின்றது.

1—11—53 திருச்சி நகர அருள்நெறித் திருக்கூட்டம ஸ்ரீ நாகநாத சுவாமி கோவிலில் ‘கூட்டு வழிபாடு’ தொடங்கியது. புலவர் திரு. சு. நடேச முதலியார் ‘ஆலய வழிபாடு’ என்பது பற்றிப் பேசினார்.

28-8-53. திருப்பேரூரில் வார வழிபாடு துவக்கம். சாந்தலிங்க சுவாமிகள் உயர்நிலைத் தொடக்கப் பள்ளி மாணவிகளும், தமிழ்க்கல்லூரி மாணவர்களும், மடாலயத்திலிருந்து திருக்கோயில் கல்யாணமண்டபம் மட்டும் ஊர்வலமாகச் சென்று சிவபுராணம் பாடித் திருக்கூட்டத்தில் அமர்ந்தார்கள். வழிபாட்டின் சிறப்பைக் கல்லூரித் தலைவர்கள் எடுத்துரைத்தார்கள். திருமுறை ஓதப்பட்டு வாழ்த்துரையோடு கூட்டம் கலைந்தது. அது முதல் ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் வார வழிபாடு நடைபெறுகின்றது.

4-9-53. மைசூர் இராஜப்பிரமுகர் பேரூர்வருகை-மாலை 6-மணிக்கு மைசூர் மன்னர் பேரூர் விஜயம் செய்தார். வந்த வழியில் சாந்தலிங்கர் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் வரவேற்புத் தந்தார்கள். பிறகு பட்டீசுவரர் ஆலயத்தில் வழிபாடு நடத்தினார்கள்.

9-9-53. கோவையில் பெரிய கடைத்தெருவில் புதிதாகக் கட்டியிருந்த பிட்டாபுரத்தம்மன் கோயில் குட

முழுக்கு விழா நடந்தது. அன்பர்கள் நன்றாக வழிபாடு செய்தார்கள்.

10-9-53 கோவைக் கடுத்த கணபதியில் அவ்வூர்க் கோயிலாகிய மூத்த பிள்ளையார் ஆலயத்தில் குடமுழுக்கு விழா நடைபெற்றது. வழிபாடு முற்றும் தமிழில் நடைபெற்றது. ஈரோடு திருவாளர் - தங்கவேலு அவர்களும், சாந்தலிங்கர் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் பிள்ளையார் பெருமைகளைப் பற்றிப் பேசினார்கள்.

13-9-53. கோவைத் தமிழாசிரியர் புலவர் சுந்தரராசனார் அவர்களுடைய திருமணத்தைப் பற்றி இதழாசிரியர் தலைமையில் ஒரு வரவேற்பு நடைபெற்றது.

## கோவைத் தமிழ்ச் சங்கம்

23-8-53 ஈசான சிவகணம் C. P. முத்துசாமி செட்டியார் தலைமையில் T. R. முத்துகிருஷ்ணபிள்ளை, திருநாவுக்கரையர் திருப்பாதிருப்புலியூர்ப் பதிக விளக்கவுரை செய்தார்.

6-9 53 கோவை கிழார் திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் தலைமையில் திரு. T. சுப்பிரமணியம் சிலப்பதிகாரம் என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள்.

13-9-53 பாரதி விழா - வித்வான்கள் அருணாசலம் பிள்ளை, T. சுப்பிரமணியம், D. N. ஆறுமுகம் பிள்ளை, முதலியோர் பேசினார்கள்.

20-9-53 துடிசை கிழார்—திரு. A. சிதம்பர முதலியார் தலைமையில் திரு. வெங்கட்டராம சர்மா "திருப்பாவை" என்னும் பொருள்பற்றி விரிவுரை ஆற்றினார்கள்.

திரு. வி. க. மறைவு பற்றிச் சங்கத்தின் சார்பாக, கூட்டம் கூடி, சொற்பொழிவாற்றி அனுதாபம் தெரிவித்தது.

18—10—53 சிவக்கவிமணிசி. கே. எஸ். முதலியார் தலைமையில் ஈசான சிவகணம் சி. பி முத்துசாமி செட்டியார் திருவாசகத்தில் "சிந்தனை நின்தனக்காக்கி" என்ற முதலடியைக் கொண்ட பாசுரத்தின் விரிவுரை நிகழ்த்தினர்.



## வார வழிபாட்டுக் கல்வி மண்டபச் சிறப்பு

சென்னை வண்ணாரப்பேட்டைகாசிவிசுவநாதர் கோயில் பிராகாரத்தில் நடைபெற்று வரும் ஆரம்பப்பள்ளிக்கும், அப்பேட்டைச் சமரச சன்மார்க்க சங்கம் வெள்ளிக்கிழமை தோறும் நிகழ்த்தி வரும் வார வழிபாட்டிற்கும் பயன்படும் வகையில், திருக்கழுக்குன்றத் திருமுறை விழாவில் மாகேசுர பூசையைச் சிறப்பாகச் செய்யும் மூதாட்டியாராகிய வள்ளியம்மையார், அக்கோயிலில் வழிபாட்டுக் கல்வி மண்டபம் ஒன்று அமைத்துத் தந்தனர். அதனை, அறநிலையப் பாதுகாப்பமைச்சர் உயர்திரு. கே. வேங்கடசாமி நாயுடு அவர்கள் 11-9-53ல் திறந்து வைத்து, அம்மையார் அறச் செயலைப் பாராட்டிப் பேசினர். திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க, மாம் பாக்கம் குருகுல ஆசிரியர் இளவழகனார், அம்மையார் படத் தையும், சைவப் புராணிகர் திரு. பா. இரத்தின சபாபதி நாயகர், அவ்வம்மையாரது கணவர் திரு. ச. கணேச முதலியார் படத்தையும் திறந்து வைத்தனர். திரு. ஏ, என். சாம் ராஜ முதலியார், பி.ஏ., எல்.டி., திருமதி. இராஜரத்தினம் அம்மையார், எம். ஏ., திரு. அடியார்க்கு நல்லார், வேதாந்த போதகாசிரியர் சுப்பிரமணிய ஆசாரியார், திரு. ஆர். சண் முகமுதலியார் ஆகியவர்களும் பாராட்டிப் பேசினர்.

## குன்றத்தூரில் அன்பர் 60-ம் ஆண்டு விழா

குன்றத்தூரில் வாழும் திரு. ஜெ. கு. வரதராச முதலியாரின் 60-ஆண்டு நிறைவுவிழா, சேக்கிழார்கோயிலிலேயே 10-9-53ல் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, சேக்கிழார் திருப்பணிக் கழகத் தலைவர் திரு. சோமசுந்தரம் செட்டியார் முதலிய தலைவர்கள் முதலியாரின் சிறந்த பண்பாடுகளையும் அடியார்க்குச் சேக்கிழார் திருநாளில் அமுதளித்துவரும் தொண்டினையும் போற்றிப் பேசினர். தமிழ்மணி சாமி வேலாயுதம் பிள்ளை தலைமை தாங்கி வாழ்த்தினர். சென்னை சேக்கிழார் திருப்பணிக் கழகத்தினர், காஞ்சி மெய்கண்டார் கழகத்தினர், தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கச் செயலாளர் சுவாமி அருணகிரிநாதர், பொருளாதாரப் பேராசிரியர்

அ. முத்தையா, புலவர்கள் பாலூர் கண்ணப்ப முதலியார், மறை. திருநாவுக்கரசு, வை. குஞ்சிதபாதம்பிள்ளை, பரலி. சு. நெல்லையப்பர் முதலியவர்களிடமிருந்து வந்த வாழ்த்துரைகளுட் பல வாசிக்கப்பெற்றன. உள்ளூர்க் கோயில்களுக்கெல்லாம் மிகச் சிறப்புற வழிபாடு செய்யப்பெற்றது. மதுரை, கோவை முதலிய பல இடங்களிலிருந்தும் அன்பர்கள் வந்து கலந்துகொண்டனர்.

## மதிப்புரை

1. ஈங்கோய்மலை அந்தாதி :—ஆசிரியர் திருவாசகமணி K. M. பாலசுப்பிரமணியம். வெளியிட்டவர், M. P. கிருஷ்ணசாமி பிள்ளை முசிரி. விஜய௵ ஆடி சுவாதித் திருநாள் வெளியீடு. விலை அணா 8. இந்நூல் 100 வெண்பாக்களைக் கொண்டது. திருச்சி வட்டத்தில் சோழ நாட்டு மேல் கோடிபாடல் தலமாகிய ஈங்கோய் மலையில் எழுந்தருளியிருக்கும் பெருமான் மீது ஆசிரியர் வணங்கினபோது நெஞ்சிலிருந்து எழுந்த அருமைக் கருத்துக்களை இணைத்துத் தெள்ளிய தமிழில் அந்தாதித் தொடராகப் பாடப்பட்டிருப்பது. நண்பர்கள் இதற்கு முன்னமே மதிப்புரை அளித்திருக்கின்றார்கள். ஆகவே தமிழ் மக்கள் இந்நூலை ஆதரிப்பார்கள். தோற்றுவாயில் ஆசிரியர் ஈங்கோய்மலைக் கோயில் தற்போது அமைந்திருக்கும் சீர்கேடான நிலையை எடுத்துக்காட்டித் தமிழ்மக்கள் அதனைப் பழுது பார்க்க மாட்டார்களா என்று ஏக்கத்துடன் விண்ணப்பிக்கின்றார். அதுவே, இந்நூலின் நோக்கமென்றறிக.

2. எழுவர் நாங்கள் :—ஒரு பயண நூல் - கோவைப் பதிப்பக வெளியீடு. கோவை அன்பர்கள் எழுபேர் சேர்ந்து ஈழநாட்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்த் திருவிழாவில் கலந்து கொள்ளச் சென்றபோது ஈழநாடு முழுவதும், சுற்றுப்பயணம் செய்த வரலாற்றைக் கூறுவது சிறந்த படங்களைக் கொண்டுள்ளது. உரைப்பகுதி, செய்யுட்பகுதி என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டது. நடை எளிய நடை. யாவரும் படித்து இன்புறலாம்.

# ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்கள் வரலாறு

[திருமந்திரமணி-துடிசைகிழார்-அ. சிதம்பரனார்]

(முற்றொடர்ச்சி மலர்-26 ; இதழ்-9 ; பக்கம் 429)

கி. பி. 694 முதல் கி. பி. 712 வரை வாழ்ந்து வந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளை இளமையில் வளர்த்துவந்த அரசன் நரசிங்கமுனை அரையன் என்பது பெரியபுராணத்தில் கண்ட செய்தியாகும்.

கி. பி. 685 முதல் கி. பி 710 வரை சோழநாடு, நடு நாடு, தொண்டைநாடு என்பவைகளை ஆண்டவன் காடவர் கோன் கழற்சிங்கன் என்ற இராச சிம்மன் என்ற நரசிம்மவர்மன II ஆவான் என்று பண்டாரத்தார் வெளியிட்ட பல்லவர் வரலாறு கூறுகிறது. இவ்வரசன் 63 நாயன்மார்களில் ஒருவன். இவனைப் பற்றிச் சுந்தரமூர்த்தி சுவாமி தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில்,

" கடல்சூழ்ந்த உலகமெல்லாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன் "

என்று பாடியுள்ளார். ஆதலின், இவன் காலத்தில் பல்லவர் நாடு வடக்கே விந்தியத்தையும், ஏனைய மூன்று திசைகளிலும் கடலையும் எல்லையாகக் கொண்டு திகழ்ந்தது என்பது தெளிவு. " காக்கின்ற " என்று நிகழ்காலத்தில் வைத்துப் பாடி இருக்கிறபடியால் சுந்தரமூர்த்திகள் காடவர் கோன் கழற்சிங்கன் காலத்தவர் என்பது விளங்கும்.

சோழநாட்டில், அப்போது, தனிஅரசு நிலைகுலைந்து, பல்லவர் ஆட்சி நடைபெற்றது. சோழர் குடியைச் சேர்ந்த குரிசில்கள் காடுகளிலும் மலைகளிலும் ஒளிந்து சஞ்சரித்துக் கொண்டு காலத்தை எதிர்பார்த்து வாழ்ந்து வந்தார்கள். சில சோழர் மட்டும் பழையாறை - திருவாரூர் - கரூர் - உறையூர் முதலிய இடங்களில் இருந்துகொண்டு குறுகிய பகுதிகளைப் பல்லவப் பேரரசின் கீழ் ஆண்டுவந்தார்கள்.

சேர நாட்டு அரசன் முதலாய் சேரமான் பெருமாள் நாயனாரும் (கி. பி. 667 - கி. பி. 712), பாண்டி நாட்டு அரசன் கோச்சடையன் இரணதீரன் (கி. பி. 670 - கி. பி. 710) என்பவனும், பல்லவ அரசன் கழற்சிங்கருக்கு நட்பு முறையில் இருந்து அரசாண்டுவந்தார்கள்.

காடவர்கோன் கழற்சிங்கருக்குக் கீழ் பல சிற்றரசர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவர்தான் நரசிங்க முனையரையர் என்பவர். இவர் நடுநாட்டின் ஒரு பகுதியாகிய திருமுனைப்பாடி நாட்டையும், சோழநாட்டில் கரூர் - உறையூர் - பழையாறை - ஆரூர் முதலிய பகுதிகளைத் தவிர்த்து எஞ்சிய பகுதியையும் ஆண்டுவந்தார்.

திருமுனைப்பாடி நாட்டுக்குத்தான் நரசிங்கர் முதல் முதல் சிற்றரசர் ஆனார். முனைப்பாடி நாட்டுக்கு அரசர் ஆனதால் நரசிங்கன் என்ற பெயருடன் முனை என்பதைச் சேர்த்து முனையரையர் என்று பட்டம் வகித்துக்கொண்டார். அரையர் என்பது அரசர் என்பதின் மரூஉ மொழி. திருமுனைப்பாடி நாட்டுக்கு அரச இருக்கை திருவெண்ணெய் நல்லூர் ஆகும். பிறகு, சோழ நாட்டின் சில பகுதிகளும் இவர் ஆட்சிக்கு வந்தது. நரசிங்கர் சோழநாடு சென்றால் தங்குவது திருவாவடுதுறைக்கு அடுத்துள்ள பேட்டையில் தான். அவர் அங்கு வழக்கமாகத் தங்கினபடியால் அதற்கு நரசிங்கன் பேட்டை எனப் பேராயிற்று. அது இப்போது நாரசிங்கன்பேட்டை எனப்பட்டு, தென் இருப்புப்பாதை நிலையமாகவும் உள்ளது. நாரசிங்கன் பேட்டையில் இறங்கித்தான் திருவாவடுதுறை செல்ல வேண்டும்.

நரசிங்கமுனை அரையரும் 63 நாயன்மார்களில் ஒருவர். இவரைப் பற்றிச் சுந்தரமூர்த்திகள் திருத்தொண்டத் தொகையில்,

"மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்"

என்று பாடியுள்ளார். இவருடைய பெயரை நோக்கினால்



இவரும் பல்லவ குடும்பத்தவரே என்று கருத இடம் உண்டு.

நரசிங்க முனையரையர் ஒரு தடவை பேட்டையில் தங்கி இருந்தபோது, ஊரார் அவ்வரசனிடம் சென்று, திருமாளி கைத் தேவரைப்பற்றிய வதந்தியைக் கூறினார்கள். அது வரை திருமாளிகைத் தேவரைப்பற்றி முனையரையர் கேள் விப்படாததால், முறையீட்டைக் கேட்டதும், காவலரை ஏவி, திருமாளிகைத் தேவரை அழைத்துவரும்படி கட்டளை யிட்டார். காவலர் திருவாவடுதுறை சென்று, திருமாளி கைத் தேவரிடம் விண்ணப்பிக்க, திருமாளிகைத் தேவர்,

"நாமார்க்குங் குடியல்லோம், நமனை அஞ்சோம்,
நரகத்தில் இடர்ப்படோம், நடலை இல்லோம்,
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன் நற்சங்க வெண்குழையோர் காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்
கொய்ம் மலர்ச்சே வடியிணையே குறுகினோமே"

என்று வாகீசர் பாடிய தாண்டகத்தைக் கூறி, "அரச னிடம் எனக்கு வேலை இல்லை, நான் அங்கு வரவேண்டிய அவசியமும் இல்லை, நீங்கள் போகலாம்" என்று சொல்லி மறுத்துவிட்டார்.

காவலர்கள் மீண்டு அரசனிடம் சென்று நடந்ததை அறிவித்தார்கள். பின் முனையரையர் தேவரைப் பற்றி விசாரித்து, அவர் சிவஞானமும் எண் சித்திகளும் கைவரப் பெற்ற ஒரு ஞான சித்தர் எனத் தெரிந்து, அவரைத் தானே நேரில் பார்த்து, ஊர் விவகாரங்களைப்பற்றித் தெரியப் படுத்திவிட்டு வரலாம் என்று அரசன் புறப்பட்டான். அரசனும் 'மெய்யடியான்' ஆதலால் திருமாளிகைத் தேவர் மறுத்து உரைத்ததைப் பற்றிக் குறையாக நினை யாமல், ஊரார் சொல்லும் குற்றச்சாட்டை நீக்குவான் கருதிப் புறப்பட்டான். அரசன் புறப்பட்ட உடனே,

வழக்கம்போல் கூடவே மந்திரி பிரதானிகளும், காவலாளர்களும், வீரர்களும், யானை குதிரை முதலிய ஒரு சிறு படையும் பின் தொடர்ந்தன. இது அக்கால வழக்கம். அரச மரியாதையை ஒட்டியது. சண்டைக்காகப் புறப்பட்டதல்ல. அரசர் மந்திரி பிரதானிகளுடனும் சிறு சேனையுடனும் திருவாவடுதுறை சேர, ஊர் மக்களில் சிலர் கலவரப்பட்டு, அரசன் தேவரைப் பிடித்துக் கொண்டு போகத்தான் வந்திருக்கிறான் என்று பயந்து, ஓடிப்போய்த் தேவரிடம் விண்ணப்பித்தார்கள். தேவர் அவர்கள் சொல்லுவதை நம்பி, காவலர் கூப்பிட்டும் போகாததால் அரசன் தண்டுடன் தம்மைப் பிடிக்க வருகிறதாகவே தேவர் எண்ணினார். ஆதலால், அவர்,

"ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணிற் றவத்தான் வரும்" (தமிழ் வேதம்)

என்ற பொய்யாமொழிப்படி, அரசனைப் பகைவனாகப் பாவித்து, அவனை எதிர்க்க, திருவாவடுதுறைக் கோவில் மதில் மேல் உள்ள நந்திகளை எல்லாம் உயிர்ப்பித்து, அரசன் பேரில் சண்டைக்கு ஏவினார். அது கண்டு அரசன் பயந்து, தேவரிடம் சரண்புக, தேவரும் நந்திகளைத் திருப்பி, பழையபடி இருக்கச் செய்து, அரசனையும் மன்னித்து, இருக்கும்படி பணித்தார். பின் அரசன் தேவருடன் கலந்து பேசி, ஊரார் அலர் தூற்றுவதை எடுத்துச் சொன்னான். தேவரும் மக்களுடைய அறியாமைக்கு நனி வருந்தினார்.

திருமாளிகைத் தேவருடைய அதிதீவிர பக்குவத்தையும், அடியார் பத்தியையும், சைவ சமயத்தை வளர்க்கும் மாண்பையும் அரசன் கண்டு, அவரைப் பணிந்து போற்றி மீண்டான். அன்று முதல் திருமாளிகைத் தேவருக்கும் அரசனுக்கும் நட்பு வளர, அரசன் தேவருக்கு வேண்டும் உதவிகளைப் புரிந்துவந்தான்.

பின்னர், அரசன் அவ்வூர் மக்களுக்கு உடல் தத்துவம், மனோதத்துவம் முதலிய நூல்களின் முறைமைகளையும்



உட்கருத்தையும் விளக்கி, அவர்களுடைய ஐயங்களை அகற்றினான். "பழி ஒரு பக்கம் பாவம் ஒரு பக்கம்" என்னும் பழமொழியின் கருத்தை மக்கள் உணர்ந்தார்கள்.

### திரு ஆ ஆடுதுறை

திருவாவடுதுறையில் அம்மன் பசு உரு எடுத்து சிவனை வழிபட்டுப் பேறு பெற்றாள் என்பது புராணம். மயிலாக உரு எடுத்துச் சிவனை வழிபட்ட தலம் மயிலாடுதுறை (மாயூரம்,) அல்லது, திருமயிலை என்ற மயிலாப்பூர். அதுபோல, ஆ ஆக உருவெடுத்து அம்மன் வழிபட்ட தலம் ஆ ஆடுதுறை ஆயிற்று. ஆ ஆடுதுறை என்பது பேச்சு வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் ஆ அடுதுறை என குறுகி, 'திரு' சேர்க்கப்பட்டு "திரு ஆவடுதுறை" என வழங்கப்படுகிறது. அல்லது, அம்மையின் பசுத்தன்மையை நீக்கிய தலம் என்றாவது பொருள் கொள்ளலாம். இது போலவே, வாலி, சுக்ரீவர் என்ற குரங்குகள் வழிபட்ட தலங்களுக்கு, வடகுரங்காடுதுறை, தென்குரங்காடுதுறை என்ற பேர்கள் உண்மை நோக்கத்தக்கது.

### 5. வரை நன்காட்டின் உடம்பின் எழுபுகை மாற்றியது.
### 6. கொங்கணர் பாத்திரம் சுவற்றியது

இவ்விரண்டு சித்திகளையும் தேவர் செய்து காட்டியது எப்போது? எவ்விடத்தில்? எதற்காக? என்ற விபரங்கள் கிடைத்தில. கிடைக்கும்போது சேர்த்துக் கொள்ளப்படும்.

### கொங்கணர்

கொங்கணர் என்ற பெயரையுடைய சித்தர்கள் இருவர் இருவேறு காலங்களில் இருந்திருக்கிறார்கள். கி. பி. முதலாம் நூற்றாண்டில் நெடுமாறன் வள்ளுவனார் காலத்தில் இருந்த கோங்கணர் முதலாமவர். திருமாளிகைத் தேவர் காலத்தில் போகர் மாணவராக விளங்கிய கோங்கணர் இரண்டாமவர். திருமாளிகைத் தேவரும் போகருடைய மாணவரே.

சுவற்றுதல் என்றால் குடித்தல்—வற்றச் செய்தல் என்று பொருள்படும். கொங்கணருடைய தீர்த்தம் வைத்துக் கொள்ளும் கமண்டலப் பாத்திரத்தைத் தேவர் எப்பொழுது வற்றச் செய்தார், எதற்காக அப்படிச் செய்தார், என்ற விபரம் கிடைக்கவில்லை.

கமண்டலம் = கம் + மண்தலம் = நீர்வைத்துக் கொள்ளும் மண்பாத்திரம் என்பது பொருள். இதனால் இரண்டாம் கொங்கணரும் திருமாளிகைத் தேவரும் ஒருகாலத்தவர் என்பது தெரிகிறது.

### 7. உணவதாய் வெந்திடும் பயறு முளைக்கச் செய்தது

தேவர் திருவாவடுதுறையில் குரு ஆணைப்படி மாகேசுரபூசை செய்துகொண்டு, தவம் இயற்றி வருங்காலத்தில், போகர் இரண்டாம் முறை ஆவடுதுறை எய்தினர். ஒருநாள் கோவிலில் இரவில் சுவாமி தரிசனம் செய்துவிட்டு, மடம் செல்லுகையில், தீவ்ட்டி பிடிப்பவன் தூங்கிவிடவே, திருமாளிகைத் தேவர் தீவட்டியை எடுத்துக்கொண்டு முன் செல்ல, மடத்திற்குப் போனதும், வெளியிலேயே தீவட்டிக்காரனை நிற்கும்படி பணித்து, உள்ளே போய்விட்டார். தீவட்டி பிடித்து வந்தது தேவர் என்று அவருக்கு அப்போது தெரியவில்லை. திருக்கோவிலில் சுவாமி வழிபாட்டின்பின் பிரசாதமாக பயற்றஞ் சுண்டல் போகர், திருமாளிகைத் தேவர் முதலிய எல்லோருக்கும் வழங்கப்பட்டது. உணவாய் வெந்தபயறு ஒருகையிலும், தீவட்டியை இன்னொருகையிலும் தேவர் அச்சமயம் வைத்துக்கொண்டிருந்தார். குரு வெளியிலேயே நிற்கும்படி ஆணையிட்டதால் அன்று இரவு முழுதும் அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்து, மறுநாள் குருவின் உத்திரவு பெற்று ஏகினர். ஒருகையில் வெந்த பயறும் ஒரு கையில் தீவட்டியும் இருந்தபடியால், நித்திய அனுட்டானங்களுக்கும் குரு பணிக்கும் தம்முடைய தவமகிமையால் வேறு இரண்டு கைகளை உண்டாக்கிக் கொண்டு காலைக்கடன்களை முடித்துக் குரு பணியில் ஈடுபட்டார். பிறகு, குருவின் ஆணைபெற்று,



தீவட்டியைத் தீவட்டிக்காரனிடம்கொடுத்துவிட்டார். வெந்த பயறு ஓர் இரவெல்லாம் இவர் கையில் இருந்த மகிமையால் வேகாத பயறாக மாறிவிடவே, அதனைத் தம் ஆட்களைக் கொண்டு மடத்தில் புழக்கடையில் ஒரு பக்கம் பாத்திகட்டி விதைக்கவே, அப்பயறு முளைத்து, செழித்து வளர்ந்து, காய்த்துப் பலன் தந்தது என்பது சரித்திரம். அன்று முதல் திருமாளிகைத் தேவர் நான்கு கைகளுடன் விளங்கி வந்தார். திருவாவடுதுறையில் இருக்கும் அவருடைய திருவுருவம் இன்றும் நான்கு கைகளுடன் இருப்பது யாவரும் அறிவர். இந்த விவரங்களை எல்லாம் அறிந்த ஊர் மக்கள் கும்பல் கும்பலாக வந்து தேவரை வணங்க, வழிபட்டு, தேவர்மேல் தாங்கள் கொண்ட தப்பெண்ணத்திற்காக, வருந்தி, மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, தேவருடைய திருவருள் பெற்றுச் சென்றார்கள். தேவர் செய்து உலகர்க்குக் காட்டிய சித்திகளைப் பற்றித் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர்.

"குடங்கர் விசும்படை கிழுவக் குணபம் நடந்திட
    இயக்கி, கொடிஞ்சிப் பொற்றேர்
வடக்கழற்றி ஓட்டி, மதில் நந்திகளை வரவழைத்து
    வரை நன்காட்டின்
உடம்பி னெழுபுகை மாற்றி, கொங்கணர் பாத்திரம்
    சுவற்றி உணவதாய் வெந்
திடும் பயிறு முளைசெய் தெமக்கருள் திருமாளிகைத்
    தேவர் இணைத்தாள் போற்றி"

என்று பாடித் துதித்துள்ளார்.

### (ஊ) தில்லை சென்று திருவிசைப்பா பாடியது

இப்படியாக திருமாளிகைத் தேவர் திருவாவடுதுறையில் தவம் இயற்றிக்கொண்டு இருக்கும்போது, தில்லை சென்று கூத்தப்பெருமானை வணங்க வேண்டுமென்று எண்ணி, அவர் ஆவடுதுறையினின்றும் புறப்பட்டு, தில்லை சென்று, அங்கே அவர் தனி இடம் அமைத்துக்கொண்டு, நாடோறும் காலையும் மாலையும் கூத்தப்பெருமானைக் கண்டு

வணங்கி வந்தார். அப்போது அவர் அப்பெருமானைப் பற்றி நான்கு பதிகங்கள் (பஞ்சமப் பண்ணில் மூன்றும், காந்தாரப் பண்ணில் ஒன்றும்) பாடினார். அப்பாக்களுக்கு திருவிசைப்பா எனப் பேர் அமைந்தது. நான்கு பதிகங்களுக்கும் மொத்தப் பாட்டுக்கள் 45.

### (எ) பதிக ஆராய்ச்சி

இவர் பாடிய நான்கு பதிகங்களுள் முதற் பதிகத்தில்

"விளம்புமா விளம்பே" —"பணியுமா பணியே"
"கருதுமா கருதே" —"உரைக்குமா றுரையே"
"நணுகுமா நணுகே" —"இசையுமா றிசையே"
"புகருமா புகரே" —"புணருமா புணரே"
"தொடருமா தொடரே" —"விரும்புமா விரும்பே"
"நினையுமா நினையே"

என்று கூறியுள்ளவைகளை நோக்குமிடத்து, இவர் பசுகரணங்கள் மாறிப் பதிகரணங்களுடன் தில்லையில் வாழ்ந்து வந்தார் என அறியக்கிடக்கிறது.

இரண்டாவது பதிகத்தில் 'மலர்ச் சேவடி', 'சிலம்பொலி', 'கணைக்கால்', 'குறங்கு', 'நிதம்பம்', 'புலியதள்', 'திருவயிற்றுந்தி', 'உதரத்தனிவடம்', 'முறுவல்', 'பவளவாய்' 'குழைக்காது', 'மலர்முகம்', 'சென்னி', 'செஞ்சடை' என்று பாடியுள்ளதை நோக்க, கூத்தப்பெருமான் பாதம் முதல் கேசம் வரை நேரே தமக்குக் கொடுத்த காட்சியை வருணித்துப் பாடியுள்ளார் என்று தெரிகிறது.

மூன்றாம் பதிகத்தில் நாயகன் நாயகி பாவத்தில் அகப்பொருட்டுறையில் யோகசித்தி கைவந்ததைப் பாடியுள்ளார்.

நான்காம் பதிகத்தில், தில்லைவாணருடைய திருவடிகளைப் பேணாத, போற்றாத, வணங்காத பேர்களையெல்லாம் பார்க்கவும், பேசவும் கூடாது என்று கூறுகிறார். இவருடைய சித்த வைராக்கியம் இதனால் வெளியாகிறது. இவர் சிவனடியாரிடத்தும் சிவ[illegible] சைவ சமய வளர்ச்சியிலும் தம் க[illegible]றியிருந்தார் என்று தெளிவாகிறது. (தொடரும்)

## சைவப் புலவர் தேர்வு

இத்தேர்வு 6-12-53 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் அன்று பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரையிலும், சிதம்பரம் (அண்ணாமலை நகரில்), நாகர்கோயில், யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெறும்.

தேர்வு நடைபெறும் இடம், தேர்வு நடத்தும் மேற்பார்வையாளரின் பெயர் முதலிய விவரங்கள் பரிட்சை எழுதுவோருக்குப் பிரத்தியேகமாகக் கடித மூலம் முன்னரே அறிவிக்கப்படும்.

---

## பண்டிதமணி பிரிவு

சமாஜத்தின் 25-வது, 37-வது ஆண்டுவிழாக்களில் தலைமை வகித்தும், பல ஆண்டுகளில் சொற்பொழிவு செய்தும், திருவாசகத்துள் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை என்னும் பகுதிகட்குக் கதிர்மணி விளக்கம் என்னும் அரிய உரை இயற்றியும், சைவத் தமிழ்த் தொண்டுகள் புரிந்த உயர்திரு. பண்டிதமணி மகாமகோபாத்தியாய, முதுபெரும் புலவர், சைவ சித்தாந்த வித்தகர், மகிபாலன்பட்டி மு. கதிரேசன் செட்டியார் அவர்களின் மறைவு குறித்து சமாஜம் பெரிதும் இரங்குவதோடு அவர்களது சிறந்த தொண்டுகளைப் பாராட்டி அவரது ஆருயிர் அம்பலவாணர் திருவடிக்கீழ் அமைதியுறுக என இறைவனை வழுத்துகிறது.

## சமாஜ வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெரியபுராணம்—அகராதியுடன் ... | 3 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ... | 1 | 0 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை .... | 0 | 12 |
| திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை) ரூ. 8. அங்கத்தினருக்கு | 7 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்) ... | 0 | 8 |
| சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல. ... | 0 | 2 |
| சிவஸ்தல யாத்திரை மஞ்சரி ... | 0 | 4 |

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

### குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்) ஒன்று ஒரு ரூபா வீதமும், முழு மலரல்லாத தனி இதழ் ஓர் அணா வீதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 4 (1931), 14 (1941), 15 (1942), 24 (1951)]

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi, Edited by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., and Published by S. Satchidanandam Pillay, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 192, Lloyd Road, Royapettah, Madras-14.